ஓம்

பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "—திருவள்ளுவர்

(*All Rights Reserved.*)

தொகுதி 2 | நள ௵ மார்கழி ௴ 1௳ | பகுதி 6
1916-ம் ௵ டிசம்பர் ௴ 15௳

## கடவுள் வணக்கம்

தெருளாகி மருளாகி யுழலுமன மாய்மனஞ்
சேர்ந்துவளர் சித்தாகி யச்
சித்தெலாஞ் சூழ்ந்தசிவ சித்தாய் விசித்ரமாய்த்
திரமாகி நானு விதப்
பொருளாகி யப்பொருளை யறிபொறியு மாகியைம்
புலனுமா யைம்பூ தமாய்ப்
புறமுமா யகமுமாய்த் தூரஞ் சமீபமாய்ப்
போக்கொடு வரத்து மாகி
யிருளாகி யொளியாகி நன்மைதீ மையுமாகி
யின்றாகி நாளை யாகி
யென்றுமா யொன்றுமாய்ப் பலவுமா யாவுமா
யிவையல்ல வாய நின்னை
யருளாகி நின்றவர்க ளறிவதல் லாலொருவ
ரறிவதற் கெளி தாகுமோ
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மான பரமே.

---

சாதிகுலம் பிறப்பிறப்புப் பந்தமுத்தி யருவுருவத்
தன்மை நாம
மேதுமின்றி யெப்பொருட்கு மெவ்விடத்தும் பிரிவறநின்
றியக்கஞ் செய்யுஞ்
சோதியைமாத் தூவெளியை மனதவிழ நிறைவான
துரிய வாழ்வைத்
தீதில்பர மாம்பொருளைத் திருவருளே நினைவாகச்
சிந்தை செய்வாம்.

# ஆனந்தபோதினி

௧௯௩௫ மார்கழிமீ 1௨


## மாதரும், நாவல்களும்

நாவல்கள் அதிகமாய் மலிந்திருக்கும் இக்காலத்தில் ஸ்திரீகள் நாவல்களை மிக்க பிரியமாய் வாசிக்கிறார்கள். சிலர் ஸ்திரீகள் நாவலை வாசிக்கவே கூடாதென்கிறார்கள். இது சற்றும் யோசிக்காமல் கூறும் அவசரக் கூற்றேயாகும். இது ஜலத்தில் புழுவிருக்கிறதென்றால் எந்த ஜலத்தையும் தொடவே கூடாது என்பதுபோலிருக்கிறது. கடந்த மாதத்தில் வெளியான ஒரு மாதாந்தத் தமிழ் சஞ்சிகையில் ஒரு சகோதரி இரண்டு நூலாசிரியர்கள் எழுதிய மூன்று நாவல்களைக் கூறி, அவற்றைமட்டுந்தான் மாதர் வாசிக்கலாகும் என்று கூறுகிறார். அது அனுபவக் குறையால் ஏற்பட்ட தவறான அபிப்பிராயமே யன்றி வேறில்லை. கற்புடைய மாதர் வாசிக்கத் தகாத நாவல்களும் கதைப் புத்தகங்களும் இருக்கின்றன வென்பது உண்மையே. சிற்றின்ப விஷயங்களைப் பற்றி கூறும் நாவல்களில் கன்னியர் வாசிக்கத்தகாத பதங்கள் அநேகம் இருக்கின்றன. அத்தகைய புத்தகங்களை நமது சகோதரிகள் வாசிக்கலாகா தென்பது உண்மையே.

எத்தகைய நாவல்களை நமது மங்கையர் வாசிக்கலாகும் என்பது இக்காலத்தில் நமது மாதர்க்கு எத்தகைய கல்வி வேண்டும் என்பதை யனுசரித்ததா யிருக்கிறது.

கற்பைப்பற்றி கூறும் சரிதைகள் ஆங்காங்கு இருக்கவேண்டியதேயாயினும் முழுதும் கற்பு ஒன்றைப் பற்றியே கூறும் சரித்திரத்தை மட்டுமே வாசிப்பது போதாது. ஏனெனில் உலகிலுள்ள வேறெந்த தேச மாதரைக் காட்டிலும் நமது நாட்டுமாதர்க்கு கற்பின் இலக்கணமும், அதன் அருமையும், பிரபாவமும் செவ்வனே தெரியும்.

ஒரு நாவலில் ஒரு கெட்ட நடக்கையுடைய ஸ்திரீயின் சரித்திரம் இருப்பதினாலேயே அந்த நாவலை வாசிக்கலாகாதென்று கூறு

வது தவறேயாகும். வெயிலின் குரூரத்தைப் பற்றி யறிந்திருந்தால்தான் வெயிலில் நிற்கலாகாது என்று காரணத்தோடு மனதிற்கு விளங்கும். அப்போது தான் நிழலின் அருமையும் நன்கு புலப்படும். தீயோர் சரித்திரத்தை வாசிப்பதால், அத்தீய நடக்கையால் அவர்கள் அடையும் துன்பமாகிய பலன் நன்கு விளங்குகிறது. அதனுல் அவர்களைப் போல் நாம் நடக்கலாகாது என்று புத்தியிற் படிகிறது.

எண்ணிறந்த நீதிகள் அடங்கியிருக்கும் இதிகாசங்களாகிய இராமாயணம் பாரதம் இவற்றில் உத்தமர் சரிதைகளும் கொடிய துஷ்டர் சரிதைகளும் கலந்தே யிருக்கின்றன. இன்றேல் அவைகளால் நீதிகளை விளக்கிக் காட்டமுடியாது. இராவணனும், துரியோதனாதியரும் இன்றேல் இராமாயணமும் பாரதமும் நீதிநூல்களாவது யாங்ஙனம். ஆகையால் நன்னடக்கை யுடையோர் சரிதையும் தீய நடக்கை யுடையோர் சரிதையும் கலந்தே யிருக்கவேண்டும். நன்னடக்கை யுடையோர் எவ்வளவு முதலில் கஷ்டப்படினும் பிறகு பெருமையையும் புண்ணியத்தையுமே அடைகிறார்களென்பதும், துர் நடக்கை யுடையோர் ஆரம்பத்தில் எவ்வளவு சந்தோஷமடையினும் முடிவில் அவமானத்தையும் தண்டனையையும் நரகத்தையும் அடைகிறார்க ளென்பதும் விளக்கிக் காட்டப்பட வேண்டும்.

இக்காலத்தில் மேல்நாட்டு துரைத்தனம் நமக்கு நன்மை செய்கிறதென்பது யாவரும் அறிந்த விஷயம். ஆனுல் மேல்நாட்டு நாகரீகம் என்ற பெயரால் மயங்கி, நம்மவரில் அநேகர் அந்த ஆசாரங்களில் அனுவசியமானவைகளையும் தீங்குண்டாக்கத் தக்கவைகளையும் கைக்கொள்வதும், நமது முன்னேர் ஒழுக்கங்களையும் ஆசாரங்களையும் அவமதிப்பதுமா யிருப்பதைக் கண்ணுல் காண்கிறோம்.

ஆகையால் மேல்நாட்டு ஆசாரங்களில் நமக்கு எதெது நன்மையை விளைவிக்கும் எதெது தீமையை விளைவிக்கும் என்பதை நமது சிறுவர் சிறுமிகளுக்கு நன்ருய் விளக்கிக் காட்ட வேண்டியது மிக்க அவசியமா யிருக்கிறது.

ஆகையால் இவற்றை யெல்லாம் வெறும் சட்டங்கள்போல் கூறிவிட்டால் சிறுவர் மனதிற் பதியாததோடு, அத்தகைய நூல்களை வாசிக்கவும் அவர்களுக்கு மனம் செல்லாது. சிறியோர்க்குமட்டுமன்று, வயது வந்தவர்களில் பெரும்பாலோருக்கும் அப்படியே. நமது அறிவு சிறுபிள்ளை போன்றது. சிறுபிள்ளைகளுக்கு நாம் ஔஷதம்

சாப்பிட்டால் வியாதி நீங்குமே யென்றுணர்ந்து அதைச் சாப்பிட அறிவு விளங்காது. ஆகையால் அவர்களுக்கு இனிப்பான தின் பண்டங்களிலேயே ஔஷதத்தை மறைத்து வைத்துக்கொடுக்கிறோம். அவர்கள் அத்தின்பண்டத்திற்கே இச்சைவைத்து அதைப் புசிக்கிறார்கள். அப்படி புசித்தாலும் உள்ளே மறைந்திருக்கும் ஔஷதம் அவர்கள் வியாதியை நீக்குகிறது.

அதுபோலவே ஞானத்தையும் நீதியையும் புகட்டும் நூற்கள் அவற்றைப் பற்றி மட்டுமே கூறுவதாயின் பெரும்பாலோர்க்கு அத்தகைய நூல்களை வாசிக்க உற்சாகமே யுண்டாகாது. அதற்காகவே நமது முன்னோர்கள் வேத உபநிடதங்களின் சாரத்தை யிடையிடை புகுத்தி புராணங்கள், இதிகாசங்கள், சரித்திரங்கள் இவற்றை யுண்டாக்கி யிருக்கிறார்கள்.

நாவல்கள் ஆச்சரியமானவையும், நெஞ்சு திடுக்கிடக் கூடியவையும் ஆகிய விஷயங்கள் அடங்கியவைகளாயின் ஆரம்பமுதல் முடிவு வரையில் வாசிப்போர் மனதைக்கவர்ந்து கொள்கின்றன. அத்தகைய நாவல்களில் கற்புடையமாதர் வாசிக்க அருவெறுப்படையத்தக்கவார்த்தைகளில்லாமல், சிற்றின்பத்தில் ஆவலை யுண்டாக்கும் விஷயங்களில்லாமல், மேற்கூறியபடி இக்காலத்தில் நமது சிறுவர்களுக்கு அவசியமாய் வேண்டிய ஆசார ஒழுக்கங்களைப் போதித்து, முன்யோசனையையும் நுண்ணறிவையும் உண்டாக்கி, அவர்கள் புத்தியை விசாலிக்கச் செய்யக்கூடிய விஷயங்களும், நமது முன்னோருடையஆசார ஒழுக்கங்களின் பெருமையை நன்கு விளக்கிக்காட்டக்கூடிய விஷயங்களும் அடங்கி யிருத்தல் வேண்டும். அதை விட்டு வெறும் நீதிகளை மட்டும் கூறும் நூல்களை நமது சிறுவர்களிடம் கொடுத்தால் அதில் அவர்கள் மனம் சிரத்தையோடு பற்றாது.

ஆனால் இக்காலத்தில் பலபேர் நாவல் எழுத முன்வந்திருக்கின்றனர். சிலர் கதை ஒருபோக்காக இருக்க அதற்குச் சம்பந்தப்படாத விஷயங்களை அதில் நுழைத்து அதின்வழியாய்த் தங்கள் மதக்கொள்கையைச் சித்தாந்தப் படுத்துகிறார்கள். சிலர் ஒரு மதத்தினர்க்கு அல்லது ஜாதியாருக்கு அல்லது வகுப்பினருக்கு மனவருத்தத்தை உண்டாக்கத்த விஷயங்களை தம்நாவல்களில் இடையிடையே நுழைத்திருக்கிறார்கள். சிலர் சிற்றின்பரசமே முழுதும் நிறைந்த கதையை யெழுதுகிறார்கள். இலக்கியம் இன்னதென்றும் இலக்கணம் இன்னதென்றும் அறியாத சிலரும் பிரம்மாண்டமாக சுயமாய்

சூட்டிக்கொண்ட பட்டங்களோடு நாவல் என்ற பெயர்சூட்டி ஆபாசமான கதைகளை யெல்லாம் எழுதிவிடுகிறார்கள்.

ஆகையால் முதியோர் தக்க நாவல்கள் இன்னவை யென்றும், எந்த நூலாசிரியருடைய நாவல்கள் நாம் முன்னே கூறிய குற்றங்களின்றி அவசியமாய் வேண்டிய நல்ல விஷயங்கள் அடங்கி யிருக்கின்றனவென்றும் உணர்ந்தபின்பே தமது மக்களிடம் அவற்றை வாசிக்கக் கொடுக்கவேண்டும்.

---

## பெற்றோர் கவனிக்கவேண்டிய ஒரு விஷயம்

நவம்பர் மீ 19௳ எழும்பூரில் வசிக்கும் ஒரு மரியாதையான குடும்பத்தைச் சேர்ந்த இராஜாராம் என்ற 16 வயதுடைய ஹிந்து வாலிபன் S. P. G. ஹைஸ்கூலைச் சேர்ந்த ஒரு பாதிரியாரால் கிருஸ்து மார்க்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டான். அவன் சீமைக்கு வாசிக்க அனுப்பப்படுவதாக ஆசை யூட்டப்பட்டானென்று கூறப்படுகிறது. அவனுடைய பெற்றோர் முதலிய ஒருவர்க்கும் தெரியாமலே அவன் கிருஸ்து மதத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டு, கல்கத்தாவிற்கு அனுப்பப்படுவதற்காக இரயில் ஸ்டேஷனண்டை கொண்டுபோகப்பட்ட சமயம் அவன் தந்தையும் தமையனும் தெய்வகதியாய்ச் சங்கதி யறிந்து, அங்கு சென்று அவனையழைத்து வந்துவிட்டார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் அன்னிய மதத்தைப்பற்றி குறை கூறவேண்டுமென்றாவது தூஷிக்க வேண்டுமென்றாவது நாம் இதை யெழுதவில்லை.

ஒருவன் தன் மதத்தில் குற்றங்கண்டு அன்னியமதமே யுண்மை யென்றுநம்பி அதில்சேர்வானாயின், தன் மதப்பலனையிழந்து, சேரும் மதத்தில் கூறப்பட்ட பதவியை யடைவானென்பதும், அப்படிக்கின்றி மண் பெண் பொன் முதலிய வற்றிற்காகவாவது வேறுகாரணத்திற்காகவாவது அன்னிய மதத்தில் சேர்வானாயின் அவன் சேரும் மதத்தால் ஒரு பலனு மடையாது, தன் மதத்தில் கூறப்பட்ட கொடிய நரகையே யடைவானென்பதும் விதி.

ஹிந்துமதம் அனாதியானது. பூரணமானது. அதில் சீர் திருத்தஞ்செய்யவும் கூட்டவும் குறைக்கவும் ஒருவழியாவது அவசியமாவது இல்லை. எத்தகைய கொள்கையுடையவனுக்கும் மோக்ஷமடைய அதில் வழியிருக்கிறது. அம்மதத்தை யாராய்ச்சி செய்தவன் எவ

னும் அதனினும் மேலான மார்க்கம் ஒன்றுண்டென்று கனவிலும் கருதமாட்டான். திருட்டாந்தமாய் அம்மதத்தைவிட்டு வேறுமதத்திற்குச்சென்றவர்களும் செல்கிறவர்களும் நாம் மேற்கூறியபடி ஏதோ உலகசம்பந்தமான ஆசையைக் காரணமாய்க் கொண்டவர்களேயன்றி வேறில்லை யென்பது திண்ணம்.

நமது சிறுவர்களுக்கு நாம் முதலில் மதக்கல்வியைப் புகட்டுவதேயில்லை. அப்படியிருக்க நமது மதத்தைத் தாழ்வுபடுத்திக்கூறி நமது சிறுவர்களின் புத்தியைப் பலவழிகளால் மயக்கி அவர்களுக்கு ஒரு ஆசையைக்காட்டி யவர்களைத் தங்கள் மதத்திற் கிழுக்கவேண்டும் என்ற நாட்டமுடையவர்களிடம் நம்மக்களைக் கல்விகற்க விடுவது யாருடைய குற்றம்? அவர்களுடைய ஆன்மசுகத்திற்கு அழிவு நேரிடச் செய்வதால் கடவுளுக்கு நாமே பதில்கூறவேண்டும். மக்களைக் காக்கவேண்டியது பெற்றோர் கடமையன்றோ. இக்காலத்தில் ஹிந்து பாடசாலைகளில்லாமற்போய்விட்டதா. எல்லாமதங்களும் கடவுளுக்குச்சம்மதமே, எல்லாமதங்களாலும் பிரதிபாதிக்கப்படுவோர் ஒரு கடவுளே என்று நமது நூற்கள் கூறியிருக்கின்றன, அவரவர் மதத்தை யவரவர் சிறந்ததாகவே மதிக்கக்கடமைப்பட்டவர்கள் என்ற உண்மைகள் யாவுமுணர்ந்து தமது குடிகளின் பலவகையான மதங்களையும் பாரபட்சமின்றி பாதுகாத்துவரும் மிக்க கருணையும் நீதியும் பொருந்திய நமது துரைத்தனத்தாருடைய பாடசாலைகளும் சர்வகலாசாலைகளும் எங்குமிருக்கின்றனவே.

அப்படியிருக்க, "கிளியைவளர்த்து பூனைகையிற்கொடுப்பது போல்" நமதுமதம் தூஷிக்கப்பட்டு அன்னியமதம் போதிக்கப்படுகிற இடங்களுக்கு நமது மக்களை யனுப்புவதால் பிறகு அவர்களுக்கு நேரிடும் ஆபத்தால் நாம் மாணமட்டும் பெருந்துயரடையவேண்டி வருவதுமட்டல்ல. நாம் காப்பாற்றக் கடமைப்பட்ட நமது மக்களை யப்படி யசாக்கிரதையாய்விட்டதற்காக அவர்களின் பெற்றோராகிய நம்மைக் கடவுள் தண்டிக்காது விடார் என்பது திண்ணம்.

ஆகையால் ஹிந்துமக்களின் தாய்தந்தையர்கள் இனியேனும் இதுவிஷயத்தில் கவனம் செலுத்தி எச்சரிக்கையாய் நடந்துகொள்வார்களென்று பிரார்த்திக்கிறோம்.

விதியின்றி அத்தகைய பாடசாலைக்கனுப்ப நேர்ந்தால், பெற்றோர் நமது மத வுண்மைகளை வீட்டிலேயே தம்மக்களுக்குப் போதித்து வரவேண்டும். அதோடு அன்னியமதத்தினர் அவர்களிடம் நமது

மதக்கொள்கைகளைப்பற்றி கூறிய குற்றங்களைக் கண்டித்து விளக்கிக் காட்டி, அவர்கள் உண்மைப் பொருளை யுணராக்குறையாலும் துவேஷபுத்தியாலும் அவ்வாறு கூறினார்களென்பதை நம்மக்களுக்கு விளக்கிக் காட்டவேண்டும். சாதாரணக் கல்வியை நோக்க நமது மதக்கோள்கைகள் நமக்கு உயிரினும் சிறந்தவை யென்பதை நாம் மறக்கலாகாது.

[குறிப்பு.—மதப்பிரஷ்டமடைந்த ஹிந்துக்களை விதிப்படி பிராயச்சித்தம்செய்து மறுபடி சேர்த்துக்கொள்ளலாம் என்று வேதத்தில் ஆதாரங்களிருப்பதாய்ப் பெரியோர் கண்டு பிடித்திருக்கின்றனர். அதன்படி சிலர் இப்போது சேர்க்கப்பட்டே வருகிறார்கள். ஆனால் அதனால் அதிக பணச்செலவும் காலதாமதமும் நேரிடாவண்ணம் அவ்விஷயத்தில் சீர்திருத்தம் செய்வார்களாயின் காலத்திற்கேற்ப அவசியமாய் வேண்டிய சீர்திருத்தங்களில் அது ஒன்றாகும்.—ப–ர்.]

---

## சசிவர்ணபோதம்

(203-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஹே! சற்குணவாரி சாந்த தயாநிதியே! ஆரம்பமுதல் இதுவரை நிகழ்ந்த தம் வாக்கியாமுதங்கள் என் மனதுக்கு நல்வழி காட்டின. ஐய! நரனாகப் பிறந்து ஞானமில்லாதவேவது ஞாலத்திற்கோர் பளுவென்றே நன்கு புலப்படுகிறது. சுவாமி! தம் தருமத்தை யெண்ணியே தரையானது சண்டாளரைத் தாங்குகிறது போலும்.

தேவ! இவ்வுலகி லெவனொருவனாலும், ஞானமேலிட்டு அவசியம் அறவழி யந்தணனைப் பணியானேல் அவன் பிறவாழி நீந்தான் என்பது நிஜம். ஹே! அருந்தவ மிகுந்த பெருந்தகையோய்! அப்பிறவிக் கடலென்பதெது? அஃது யாண்டுளது? அஃது எவ்வாறுண்டாகிறது? என்பதைச் செவ்வனே விளக்கியருள வேண்டுமெயனே யென்றிறைஞ்சிய அந்தணாளனை யணைத்து அமிர்த பாஷியங்களால் அருந்தவர் அருள்வதானார்.

சசிவர்ணா! பிறவிப் பெருங்கடலின் விவரங்களை யறியவேண்டினால், முந்தி கருமங்களின் இயல்புகளையும் அவைகளால் உண்டாகும்பலன்களையும் நன்கு உணர வேண்டும். அதன் பின்னரே பிறவிப் பெருங்கடலின் தன்மை செவ்வனே விளங்கும். சொல்வதைக்கேள், கவனி!

அநாதியா யெங்கும் நிர்க்குணமாய் விளங்கும் சோதிமயமான பரப் பிரம்மத்தினுடைய அளவிலா அபாரசக்தியின் ஓர் அம்சை யால் இவ்வெட்ட வெளியான ஆகாயம் உண்டாயிற்று. அவ்வாகா யத்தின் சக்தியால் அதினின்று வாயுவும், அவ்வாயுவின் சக்தியால் அதினின்று தேயுவும், அத்தேயுவின் சக்தியால் அதினின்று அப்பு வும், அவ்வப்புவின் சக்தியால் அதினின்று பிரிதிவியும், ஆக ஐம் பூதங்கள் உண்டாயின.

மேற்கண்ட சக்தியின் மற்றோர் அம்சையால் எண்ணிலாச் சீவ கோடிக ளமைக்கப்பட்டுப் பஞ்சபூதங்களின் உருவாம்சங்களை மூல மாகக் கொண்டு ஜீவத்தோற்றங்கள் தக்கவாறு அமைக்கப்பட் டிருக் கின்றன. அவ்வாறு அமைக்கப்பெற்ற சீவகோடிகட்கு மானசீகம் என்ற ஓர் சக்தி உதவப்பட்டிருக்கின்றது. மானசீகமேற்ற சீவ கோடிகள் சரத்தோற்றங்க ளென்றும், ஏனைய அசரத்தோற்றங்க ளென்னும் பெயர் பெறும். மேற்கண்ட சரத்தோற்றங்களான சீவ ராசிகள்.

அறிவுளதேவர்மாக்கள் அறிவின்மீன்விலங்குசெந்து
பறவைதாவரங்களென்ப பகருமேழ்பிறப்பின்பேரே. (நிகண்டு)

என ஏழுபேதங்களை யுடையன. ஆதியில் சிருஷ்டி காலத்தே இச் சீவ பேதங்களை யமைக்குங் காலம் இவைகளுக்கு மனம் அசை வற்ற தன்மையா யிருந்ததனு லித்தோற்றங்கள் நிர்க்குணமானவை களேயாம். அதாவது அழுக்கற்ற பரிசுத்த மனமுடையவைகள். சுத்தமான மானசீகத் தன்மையால் இன்னது தான் செய்யவேண்டு மென்று அறியாதவைகளா யிருந்தனவாதலால் அக்காலத்தே இச் சீவராசிகளைக் கருமம் அற்றவைகள் என்று சொல்லவேண்டும்.

கருமமின்றி ஓர் பிறவி வருமா? என்று சிலர் வாதாடுவ துண்டு. அப்பா! ஆதியிலுண்டான இச்சீவத்தோற்றங்கள் சுக் கில சோணித சம்பந்தமாய் யோனியினின்றும் பிறந்து வந்து குதிக்க வில்லை. அபார சக்தியின் சுய அமைப்பால் இவைகள் உண்டான தால் இதற்குமுன் ஆதியில் இவைகட்குச் சுய கருமமென்பது கிடை யாது. உதாரணமாக, ஒருவன் தான் விளையாடுவதற்காகக் கட்டை யாற் பலவித பொம்மைகளைச் செய்து சூத்திரம் வைத்து ஆட்டு கிறான். அப்பொம்மைகள் ஒருவராற் செய்யப்பட்டனவே யன்றி கட் டையின் கருமபலத்தினால் தானே பொம்மையாய் அமைந்ததன்று. புருஷ ஸூக்தத்தின் உண்மை யறிந்தோருக்கு இவ்விஷயம் நன்கு

புலப்படும். இனி இச்சீவ பேதங்கட்குக் கருமம் அணுகும் வகையைச் சொல்லுவோம்.

ஆதி பஞ்சபூதமுதல் சீவராசிகளீறாக வமைந்த தோற்றங்கள் சுத்த நிர்க்குணமானவை யென்று சொன்னேன். மேற்சொல்லிய ஆதி சக்தியின் மற்றோர் அம்சையால் மாயா சக்தியென்னும் ஓர் பிரமையை உண்டாக்கி அச்சக்தியை யெண் கூறாக்கிப் பிரிதிவியில் வாசனை சக்தியாகவும், அப்புவில் சுவை சக்தியாகவும், தேயுவில் பிரகாசிப்பதும் தீய்ப்பதுமாகிய சக்தியாகவும், வாயுவில் பரிச சக்தியாகவும், ஆகாயத்தில் ஒலிக்கும் சக்தியாகவும் சீவர்களின் நிர்க்குணமான (அசல) மனதிற்கு ரசோகுண தமோகுண சஞ்சல பாச சக்திகளாகவும், புத்திக்கு யுக்தி நிரூபக நிச்சய சக்திகளாகவும், அகங்காரத்திற்கு கர்த்ருத்வ சக்திகளாகவும் வகுத்து அமைத்துப் புவியின் வெட்டவெளி முழுதும் நிரப்பி வைத்து, முறையே சீவராசிகட்கு ஒன்றுமுதல் ஆறு வரையுள்ள அறிவாகிய தெரிந்து தெளியும் சக்திகளைப் படிப்படியா யமைத்து வைத்து, தக்க ஆதாரங்களையும் வேதாகம சட்டங்களையும் ஆக்கி விடுத்து, அவைகட்குத் தக்க பலன்களையும் விதித்து, சீவகோடிகட்கு இகபோகங்களையும் அவைகளில் இச்சையையுங்காட்டி இன்ப துன்பங்களமைத்து, மூடுண்ட மாயைத் திரளைத் தள்ளி மேலோங்கும் *நல்லறிவாகிய நிவர்த்தி மார்க்கங்களையும் நியமித்துக் காட்டி மூலகாரணமாகிய தான் மறைந்து நிற்க சீவகோடிகள் மானிலமாகிய கிணற்றில் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

ஹே ! தேஜோமயஞ் சேர்த்துத் திகழப்பதித்துச் சிந்தை விளக்க முறும் சசிவர்ண !

நான் சாற்றுவதைக் கேள் ! மேன்மேலும் விஷயங்களைச் செவ்வனே விளக்கிக்காட்டு மிடத்து ஆங்காங்கு சிறிது விளங்காமலும் சிலசமயத்தே வெறுப்படைந்து சப்பு கொட்டியும் வேறொன்றில் அவாவைத்து விழித்திருந்து கேட்டு இறுதியில் யாவும் விளங்கியது போன்று நடித்துக்காட்டி விலகுவதுமுதலிய கேட்போருக் குண்டாகுங் கெடுதிகளோ மிகப்பல. இத்தகைய எண்ணங்கள் அணுகா வண்ணம் ஏகாக்கிரமென்னுஞ் சிந்தையால் அரண் கட்டி நிதானித்து நோக்குங்கால் உண்ணிலையில் மூடுண்டு மடிந்து சுருண்டுகிடக்கும் ஞான கோசமயமான உணர்ச்சி பெற்று நீண்டு நிமிர்ந்து விரிந்து எழுந்து நிற்கும். ஆங்கே மனஞ்செலுத்திப் பதித்து விஷயங்களை யேற்குங்கால் செவியினூடே உட்புகுந்து வரும் உத்தம உபதேசங்

கள் யாவும் அக்கோச மயத்தே அமைந்து பொருந்தி நிறைந்து மேன்மேலும் நிலவா நிற்கும். இவ்விதஞானமானது,

“ ஒருமைக்கட் டான்கற்றகல்வி யொருவர்க்
கெழுமையு மேமாப்புடைத்து. (குறள்)

என்றவாறு இதனை யடைந்தோர் எவ்வாறாயினும், எப்பிறப்பெய்தினும், யாங்குறினும், அவரை யின்ப விமானத்தேற்றி மேலோங்கும் ஆனந்தபதத்தே யமைத்து, ஆங்கு விளங்கச்செய்வதே இதன் இயற்கையாகும். (தொடரும்)

---

## சிரிப்பு

சிரிப்பானது ஈரல், இரைப்பை முதலியவைகளின் மூலமாக நுரையீரல்களிலிருந்தும், மார்புக்கும் வயிற்றுக்கும் நடுவில் குறுக்காக விருக்கும் சர்மத்திலிருந்தும் உண்டாகிறது. அதிகமாய் நகைக்கும்போது இரைப்பை நன்றாக நசுக்கப்படுகிறது. சிரிப்பினால் இருதயம் வேகமாய் அடிக்கிறது. அது சரீர முழுமையும் இரத்தத்தைப் பாயச் செய்கிறது. உடம்பின் ஒவ்வொரு பாகத்திற்கும் சக்தியை உண்டாக்குகிறது; கண்களைப் பிரகாசிக்கச் செய்கிறது; மார்பை அகலச் செய்கிறது; தேகத்தில் நடக்கும் ஒவ்வொரு வேலையையும் சரிவரச் செய்யும்படி செய்கிறது. கெட்ட சமாசாரம், கஷ்டம், மனவருத்தம் முதலியவைகள் உண்டாகும் சமயங்களில் ஆனந்தமாகச் சிரித்தால் அவைகள் சூரியனைக்கண்ட பனிபோல் பறந்துவிடும். சந்தோஷமான நகைப்பே வியாதிகளைச் சுகமாக்கும் நல்லமருந்தென்று உலகத்தில் பிரசித்திபெற்ற மேனாட்டு வைத்திய சிரோமணிகள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இப்படிக் குதூகலத்துடன் சிரிக்கும்போது கண்களிலிருந்து உண்டாகும் பிரகாசமும் உதடுகளைச் சுற்றிலும் உண்டாகும் கோடுகளும், மலர்ந்தமுகமும், பார்ப்போருடைய மனதை ரம்மியப்படுத்துகின்றன. “அதிகமாய்ச் சிரி, அதிகமாய்க் கொழு” என்ற பழமொழி வழங்கி வருவதை யாவரும் கேட்டிருக்கலாம்.

ஐரோப்பாவிலிருக்கும் ஒரு கோடீஸ்வரப் பிரபுவை ஒரு சமயத்தில் கோகூலின் என்பவர் சந்தோஷிப்பித்தாராம். அதற்கு அந்தச் செல்வவந்தர் அவருக்கு நன்கொடை யளித்து அடியிற்கண்டவாறு எழுதுகிறார். “அனேக தத்துவசாஸ்திரிகள் நகைப்பது மேன்மையென்று சொல்லுகிறார்கள். 3000 டாலர் இனாமாக அனுப்பி

யிருக்கிறேன். தயவுசெய்து பெற்றுக்கொள்ளவும்" இன்னும்,
சிரிப்பானமனிதன் நெடுநாளைக்கு வசிக்கிறானென்று இங்கிலீஷ்கவி
யாகிய ஷேக்ஸ்பியரும் சொல்லுகின்றார். அமெரிக்காவில் ஒருஸ்திரீ
யானவள், அஜீரணம், தூக்கமின்மை அசக்திமுதலிய வியாதிகளால்
மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தாள். இப்படியிருக்கும்போது
யாரோ அவளுக்கு நகைப்பின்மேலான விஷயங்களைச்சொல்ல, அது
முதல் தினம்மூன்றுதரம் எப்படியேனும் தான்சிரிப்பதாகத் திட்டம்
செய்துகொண்டாள். சந்தர்ப்பம் வாய்த்தாலுஞ்சரி வாய்க்காவிட்டா
லுஞ்சரி அவள் நன்றாய்ச் சிரிக்க வழக்கஞ்செய்து தனக்குச் சந்தோஷ
முண்டுபண்ணிக்கொள்வாள். இவ்வப்பியாசத்தால், கொஞ்சகாலத்
தில் துன்பமெல்லாம்போய் இன்பமுற்றாள்.

அநேகமாய் நாகரீகமடைந்த தேசங்களிலோ சபைகளில் அசந்
தர்ப்பங்களிலும் அகாலங்களிலும் கூச்சல்போடக்கூடாதென்றும் சந்
தடி செய்யக்கூடாதென்றும் விதி. புத்திசாலிகளோ பெரியோர்க
ளேற்படுத்தியிருக்கும் ஒழுங்கைக் கடக்காமல் மரியாதையா யிருப்
பார்கள். ஒருவன் இழவுவீட்டில் போய்ச்சிரிக்கலாமா? காலமறிந்து
தான் ஒருகாரியம் செய்யவேண்டும். நமது இந்திய அரசர்கள் சபை
யில் எத்தனையோ விதூஷகர்கள் இருந்திருக்கவில்லையா. இவர்களில்
தெனாலிராமன் மிகவும் பேர்போனவன். புன்னகைகொள்வது மிக
வும் நல்லதென்று ஆங்கில கவியாகியடிரைடென் சொல்லியிருக்கிறார்.
மேல்நாட்டு அரசர்கள்கூட தங்களிடம் விதூஷகர்களை வைத்திருந்
தார்கள். அவர்களுக்கு Court Fool அல்லது Jester (கோர்ட்பூல்
அல்லது ஜெஸ்டர்) என்று பெயர்.

நாம் இப்போது சிரிப்பின் வகைகளைப்பற்றிக் கவனிப்போமாக.
அதில் எத்தனையோ தினுசுகள்உண்டு. சிலர் கெட்டஎண்ணத்துடன்
சிரிக்கிறார்கள். இது இதன்பார்வையில் அகப்பட்டவர்களைக்
கெடுத்துவிடுகிறது. கொடூரமான இருதயமுடையவர்கள் கொடூர
மாய்ச் சிரிக்கக்கூடும். சிலர் துவேஷமாய் கொஞ்சம் கோபத்துடன்
நகைக்கிறார்கள். இப்படி நகைப்பவர்கள் எத்தனையோ மேன்மை
யடையப்போகிற சிறுவர்களையும் மேன்மை யடைந்துகொண்டிருப்
பவர்களையும் அதைரியப்படுத்தி அவர்களுடைய வாழ்க்கைகளையும்
கெடுத்துவிடுகிறார்கள். அநேகர் தங்கள் செய்கைகளையும் ஆஸ்திகளை
யும் மேன்மையாய்ச் சொல்லிக்கொண்டு சிரிப்பதுண்டு. இதனால்
அன்னியருக்கு யாதொரு 'கெடுதியும் கிடையாது. ஆனால் மோச

மான புன்னகையுமுண்டு. இப்படிச் செய்கிறவனையேயன்றி அது வேறு யாரையும்மோசஞ்செய்யாது. இன்னுஞ்சிலர் தொண்டைக்கு மேற்பட்டே சிரிப்பார்கள். இவர்கள் வஞ்சகர்கள் நம்பிக்கைத் துரோகிகள். ஆதலால் இவர்களை ஒருபோதும் நம்பலாகாது. நாம் களைத்துப்போயிருக்கும் சமயத்திலோ, கஷ்டமடைந்திருக்கும் சமயத்திலோ மனச்சோர்வடைந்திருக்கும்போதே நமது சிநேகிதர்கள் அன்புடன் சிரித்தால் அக்கஷ்டங்கள் எங்கோ ஓடுகின்றன. அது அச்சமயத்தில் நமக்காறுதலை யுண்டாக்குகின்றது. நண்பர்காள், நாம் ஒவ்வொருவரும் ஆனந்தமாய்ச் சிரிக்கப்பழகவேண்டிய தவசியம்.

---

## விவேகமாலா.

“பீமசேனனுக்குத் தான் ஜெயித்த மக்களின் பலம் எல்லாம் சேரும்” என்பது புராணக்கதை !

அறிஞனே, இது பீமனுக்கு மட்டும் பிரத்யேகமாக ஏற்பட்ட தனிவரமல்ல. சகல ஜீவராசிகளும் அனுபவிக்கும் ஒரு உரிமை. எறும்பு முதல் எப்பிராணியும் தான் உண்ட ஆகாரத்தின் சத்தை, தன் உடம்போடு சேர்த்துப் பலமடைகின்றதன்றோ ? மாந்தர் ஒரு முறை ஒரு நல்லெண்ணத்தில் வசப்பட்டு அதன்படி நடப்பாராயின், பின் அந்நல்லெண்ணத்தின் அடிப்பட்டு மனம் அதுசெய்ய முந்துகின்றது. ஒரு முறை மெய் சொல்லிக் கண்ட ஒருவன், பின் அம்மெய்யினின்று விலகச் சம்மதிக்கிறானில்லையே. இங்ஙனமே, பொய் சொல்லல் முதலிய கெட்ட பழக்கங்களிலே ஒரு முறை பயின்ற மனம், பின் நீர்வழிப்புணைபோல அக்கேட்டின் பின்னேயே யோசனையின்றிச் செல்வது நமது அநுபவந்தானே.

ஆசை வசப்பட ஆரம்பிக்கும் மனத்தை அவ்வளவிலே புத்தியால் தட்டி நிறுத்திக் கொள்ளல் எளிதாகின்றது. அவ்வாறன்றி, இருமுறை மும்முறை என்று பலமுறைகளிலும் அம்மனம் அவ்வாசைப் பொருளைச் சிந்திக்க இடம்பெறுமேல், எண்ணத்தி லிருந்தது காரியமாகவும், மனத்தாலே பார்த்ததைக் கண்ணாலே பார்க்கவும் ஏதுவாகின்றது. கண்ணாடி வர்த்தகன், மனத்தாலே அரசன் மகளை மணந்து, அவளைத் தண்டிக்கும் அவசரத்தில் தன் கண்ணாடிச் சாமான்களை உடைத்துக்கொண்ட கதையும், காமுகர் தம் மனத்திற் கொண்ட ஆசைப்பொருள்கள் எதிரே வரப்பெற்றது போல வெளி

யில் தோன்றும் கற்பனை உருவங்களைக் கண்டு களித்தும் புலம்பி னையும் பாடுகளும் இச்சிந்தனுபலத்தால் ஏற்பட்ட பலன்களே யன்றி வேறென்ன ?

ஆதலின், நண்பனே ! மனத்தில் தோன்றும் எண்ணம் கெட்ட தாயின் அது முளைக்கும் பொழுதே கிள்ளிவிடு. நல்லதாயின், ஓயாது திரும்பத் திரும்பச் சிந்தித்து, அதைக் கண்கூடாகக் கண்டு பெரும் பேறடை.

சிந்தனுபலமே நிர்விகாரமாகிய பரம்பொருளுக்குப் பலவேறு ரூபங்கள் தரக் காரணமாயிருந்தது.

* * * * *

மகனே!

" மலர்மிசை, நீலவானில், மாதரார்முகத்தில் எல்லாம் இலகிடும் அழகை " உன் கண்ணாரஉண்டு களிப்பாயாக. இதுதவறாகாது. ஆயின் இவ்வஸ்துக்கள் பிரத்யேகமாக உனதுபோகத்திற்கே உரி யவை என்று எண்ணிவிடாதே. அப்பொழுதே நீ பாவம் (கேடு) செய்தவனாகிறாய். கிரையமிட்டுவாங்கி, செலவுசெய்து பண்படுத்தி, மரங்களோ செடிகளோ நட்டுப் பயிராக்கி வாவிகளும் மாடங்களும் நிறைத்து நந்தவனம் செய்யும் சொந்தக்காரன் அவ்வுய்யானத்தாலே துன்பமேயன்றி இன்பம் எய்துவதில்லையன்றோ ! பிச்சையெடுத் துண்ணும் ஏழைமுதல், தனவந்தர் எவரும் அப்பூமரங்களின் தண் ணிய நிழலையும், வாவிகளினின்று நீர்த்திவலை சுமந்துகொண்டுவரும் மெல்லிய பூங்காற்றையும், மலரினம் அளிக்கும் நறுமணத்தையும் அநுபவித்து அடங்காத ஆநந்தம் எய்த, அச்சிங்காரத் தோட்டத் துக்குரியவன் அதை ஆக்குவதிலும் போஷிப்பதிலும் மிகுதியாக காப்பதிலுமே மனத்தைப் பறிகொடுத்துவிட்டு, துன்பத்தையே அனுபவிக்கின்றானே ! ஏன் இப்படி ? வேறொன்றுமில்லை. இவற்கு உரிமை எண்ணம் இருந்தது. தோட்டம் என்னது என்ற எண்ணம் இவன் மனத்தில் நிறைந்து அதை அநுபவிக்க இடம் தந்ததில்லை. இவ்வுரிமை எண்ணமே இவனது துன்பத்துக்குக் கருவியாயிற்று.

ஆதலின் மகனே, எனது என்ற உரிமை எண்ணத்தை ஒழிப்பா யாக. இது துன்பமேயன்றி இன்பம் தாராது. ஆதலின் அதை நீக்கிவிடு மகனே நீக்கிவிடு ! !

* * * *

கீழே, தரையிலே நடமாடும் ஒருவனே, அதிலுள்ள பள்ளங் களையும் மேடுகளையும் கண்டு பயப்படவேண்டியவ னாகின்றான்.

ஆயின், வானத்திலே கிளம்பிப்போகப்போக, அப்பேடுகளும் பள்ளங்களும் சிறிது சிறிதாக மறைந்து உன்னதத்திலே சமதளமாகத் தோன்றுகின்றன. அதுபோலவே, மானுடா, நீ சிற்றறிவு சிறு ஆசை என்கின்ற தாழ்ந்ததலத்திலே நிற்கும்வரை இன்பதுன்பங்கள், நன்மைதீமைகள் என்றதுவந்தங்கள் (மேடு பள்ளங்கள்) கண்டு கலங்குவாய். ஆயின் அறிவென்னும் வானத்திலே கிளம்பி, இம்மண்ணுலக சம்பந்தத்தை அறவேவிட்டு நீங்கிய அந்த க்ஷேத்திலேயே இவையெல்லாம் மறைந்து சமநிருஷ்டி உண்டாகின்றது. பேதம் பின்பு தோன்றுவதில்லை. ஜாதி அவ்வுயர் நிலையிலில்லை.

ஆயின், இச்சட சம்பந்தமும் சிற்றறிவும் வைத்துக்கொண்டு, பேதமில்லையென்று எண்ணி மேடுபள்ளங்களை மறந்து நடக்க ஆரம்பித்து விடாதே; கைகால் முறிந்தோ, ஆழமறியாத பாதலத்திலமிழ்ந்தோ பரிதவிப்பாய்.

ஆதலால் பேதமொழிக்க வேண்டுமாயின் அறிவில் உயரச் செல்லாது வாயில்மட்டும் பேதம் ஏனோ எல்லாம் ஒன்றுதான் என்று பிதற்றி வீணே கைகாலை முறித்துமுடமாக்கிக் கொள்ளாதே.

(குறிப்பு:—இது யாவரும் ஆழ்ந்தபுத்தியால் நன்றாய்ச் சிந்தித்து உணரவேண்டிய அரிய தொரு ஞானோபதேசமாகும். இதுமேலோர்பாலும் நன்கு விசாரித்துணரத்தக்கது. ப-ர்.)

---

## சுகவழியென்றுவென்ன?

(216-ம் பக்கத் தொடர்ச்சி.)

குளத்து ஜலம் எப்படிப்பட்டது?

குளத்து ஜலம் சுத்தமானதுதான். ஆனால், கரைகளில் அசுத்தம் செய்தல், மரங்களைப் பயிராக்கி இலைகள் அதில் உதிர்ந்து அழுகும்படி விட்டுவிடல், ஸ்நானஞ் செய்து அழுக்குத் துணிகளைத் துவைத்தல், ஆடு மாடுகளைக் குளிப்பாட்டல் முதலியவைகளால் கெட்டுப்போகின்றது.

கிணற்றுத் தண்ணீரெப்படிப்பட்டது?

இது உப்பா யிராவிட்டால் இதுவே யெல்லாவற்றிலும் மேலான தண்ணீர். இதையும் வெகு சுலபத்தில் கெடுத்து விடுகிறார்கள்.

எப்படிக் கெடுக்கிறார்கள்?

பக்கங்களில அசுத்தமாயிருக்கவிடல், சுற்றிலும்தண்ணீர்தேங்க விடுதல்; பக்கத்தில் மரங்களிருக்கவைத்தல்; அசுத்தமான பாத்திரங்களையும், கயிறுகளையும் கொண்டு ஜலமிறைத்தல் முதலியவைகளால்

கெட்டுப்போகிறது. ஆனதால் ஆறுகள், குளங்கள், கிணறுகள் முதலியவைகளைச் சுத்தமாக வைத்திருந்தால் அவற்றிலுள்ள தண்ணீர் சுத்தமாயிருக்கும். குடிதண்ணீருக்கு எப்போதும் ஒரு குளம் கடுங்காவலுடன் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

சுத்தமான ஜலம் கிடைக்காவிட்டா லென்ன செய்கிறது ?

கிடைத்தத தண்ணீரை நன்றாகக்காய்ச்சி வடிக்கட்டி ஆறவைத்துச் சாப்பிடவேண்டும்.

நாம் ஏன சாப்பிடவேண்டும்?

நாம் சாப்பிடாவிட்டால் படிப்படியாயிளைத்து கடைசியில் செத்துப் போவோம்.

சாப்பாடு நமக்கு என்ன செய்கிறது ?

(1) நமது உடம்பை வளர்த்து பலத்தைக் கொடுக்கிறது; (2) தேகத்திலுண்டாகும் கழிவையும் வேலை செய்வதாலுண்டாகும் களைப்பையும் சரிப்படுத்துகின்றது; (3) நமக்கு வேண்டிய அனலைத் தருகிறது;

போஜன பதார்த்தங்களெவை ?

குழந்தைகளுக்குப் பால் முக்கிய ஆகாரமாம். நமக்குத் தானியங்கள், நெய், நன்றாய்க் கனிந்த பழங்கள், காய்கறி பதார்த்தங்கள், கிழங்குகள், கீரைகள் ஏலம், கிராம்பு முதலியன.

போஜன பதார்த்தங்களெத்தனை வகைப்படும் ?

நான்கு வகைப்படும்.

அவை எவை ?

(1) சதையை உண்டாக்கும் சத்துள்ள பதார்த்தங்கள்; (2) கொழுப்புப் பதார்த்தங்கள்; (3) கரி ஜல வஸ்துக்கள்; (4) உப்புகள்.

சதையை உண்டாக்கும் பதார்த்தங்களெவை ?

பலவித காய்கனி கிழங்குவகைகள் பருப்பினங்கள் பால், (மாமிசம், முட்டை) முதலியன.

கொழுப்புப் பதார்த்தங்களெவை ?

ஜீவ ஜந்துக்களிடத்திலிருந்தும் புல் பூண்டு முதலிய விருக்ஷங்களிலிருந்தும் உண்டாகும் எண்ணெய்களும் கொழுப்புகளும்

கரிஜல வஸ்துக்களெவை ?

மாச் சத்துக்கள், சர்க்கரைகள்.

உப்புகளெவை ?

சாப்பிடும்உப்பு, காய்கறிகளிலிருந்து உண்டாகும் உப்பு, இரும்பு, சுண்ணும்புத் தண்ணீர்.

சதையை உண்டாக்கும் பதார்த்தங்களால் பயனென்ன ?

தேகத்திற்கும் மனதிற்கும் பலத்தையும் உறுதியையும் கொடுத்து சகல யந்திரங்களையும் நன்ருய் வளரச் செய்கின்றன.

கொழுப்புப் பதார்த்தங்களால் பயனென்ன ?

மூளை நரம்பு முதலியவை வளருவதற்கும், சரீரத்தில் அனலுண்டாகிறதற்கும் அநுகூலமானவை.

கரிஜல வஸ்துக்களால் பயனென்ன ?

ஓடி நடமாட அவசியமான சரீர அனலை உண்டாக்குகின்றன.

உப்புகளால் பயனென்ன ?

எலும்பு முதலிய யந்திரங்களை வளர்க்கின்றன. அவைகளை உபயோகியாமற் போனால் பல வியாதிகளுண்டாகும். குடலில் பூச்சிகளுண்டாகும்.

ஒருவன் சாப்பிடவேண்டிய போஜனத்தின் நிறை என்ன ?

அளவுக்கு மிஞ்சினுல் அமிர்தமும் விஷம் என்றபடி அவனுடைய தேக நிறையில் இருபதி லொருபங்கு சாப்பிடவேண்டும். அந்த ஒரு பங்கை மூன்ருகப் பாகித்து இரண்டு பங்கு ஜல பதார்த்தமும் ஒரு பங்கு கன பதார்த்தமுமா யிருக்கவேண்டும்.

யாருக்கு அதிக போஜனம் வேண்டும் ?

அதிக வேலை செய்கிறவர்களுக்கு.

நாம் அதிகமாய் சாப்பிட்டாலென்ன ?

(1) சரியாய் ஜீரணமாகாமல் அசுத்தவாயுக்களுண்டாகின்றன ; (2) ஜீரணக் கருவிகள் பலனற்றுப் போகின்றன ; (3) பலவித வியாதிகளுண்டாகின்றன. இதனாலேயே ஔவையாரும் 'மீதூண் விரும்பேல்' என்று கூறியிருக்கிருர்.

நாம் எவைகளைச் சாப்பிடக்கூடாது ?

நன்ருய்ச் சமைக்காத அல்லது குழைந்து கரிகிப்போன சாப்பாடு முதலியதும், கனியாத அல்லது அழுகிப்போன பழங்களும், பச்சைக் காய்களும், எதையும் அதிகமாய்ச் சாப்பிடலும், சுருட்டு மதுபானம்குடித்தல் முதலியனவும்.

மதுபானஞ் செய்தாலென்ன ?

(1) வெறிகொண்டு ஆடுவதோடு பொய், கொலை, களவு முதலியனவும் செய்யத் தூண்டப்படுகிருர்கள்; (2) சுகவீனம், நாஜுவித தூர்க்

குணங்கள், பணச்செலவு, புத்திக்குழப்பம் முதலிய கெடுதிகளுண்டாகின்றன; (3) கடின உழைப்பைத் தாங்கும் சக்தியிராது; (4) உஷ்ண தேசங்களில் மதுபானஞ் செய்வோர்க்கு வியர்வை தடைப்பட்டு அநேக கெடுதிகளுண்டாகின்றன.

*சாப்பிடத் தகுந்த காலங்களெவை ?*

"பாலோடாயினுங் காலமறிந்துண்" என்றபடி காலையில் 7-மணிக்கு லேசான ஆகாரமும், பகல் 1-மணிக்கும், இரவு 7-மணிக்கும் நல்ல சூடான ஆகாரமும் சாப்பிடவேண்டும் ?

*ஏன் ஐந்துமணிக் கொருதடவை சாப்பிடவேண்டும் ?*

நாம உண்ட போஜனம் ஜீரணமாவதற்கு 3—மணியும் வயிறு இளைப்பாறுவதற்கு 2—மணியும ஆக ஐந்துமணிக்கு ஒரு தடவை சாப்பிடவேண்டும்.

*எப்படிச் சாப்பிடவேண்டும் ?*

உண்டிக்கழகு விருந்தோடுண்ணல் என்றபடி தனியாகச் சாப்பிடாமல் பல பேர்களுடன் வெறுப்பில்லாமல் மனக்களிப்புடன் பதார்த்தங்களை நன்றாய் மென்று விழுங்கவேண்டும். மிதமாகச் சாப்பிடவேண்டும். மிதமாக ஜலத்தைப் பருகவேண்டும். சாப்பிட்டவுடன் கஷ்டவேலையாவது தூக்கமாவது செய்யக்கூடாது. சாப்பிடும்போது துயரம், பயம், கோபம் உண்டாக்கத்தக்க சம்பாஷணை கூடாது.

## பத்திரிகை வாசிப்பதினால் உண்டாகும் பயன்

(160-ம் நம் தொடர்ச்சி)

1. 'தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்தூறும் அறிவு' என்னும் மேலோர் வாக்கியப்படி கல்வி கேள்விகளினாலும், பல தேசவர்த்தமானங்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கும் பத்திரிகையானது தன்னை வாசித்து வருபவர்களுக்கு, லௌகிக ஞானத்தையும், வைதிக ஞானத்தையும் ஆற்றின் ஊற்றைப்போல அழகாய் உற்பத்தி செய்கிறது.

2. கற்றுத்தேர்ந்த அநேக வித்துவான்களிடமிருந்து கல்விச் செல்வங்களைத் திரட்டிக்கொண்டுவந்து, நாம் எதெதில் விருப்பமுள்ளவர்களாயிருக்கிறோமோ, அதில் நமக்கு சதுர்வித புருஷார்த்தங்களை எளிதில் அடையும் ரகசியங்களைக் கற்றுக்கொடுக்கும் ஓர் சற்குருவைப்போல அநேக தத்துவங்களை ஆனந்தமாய்ப் போதிக்கிறது.

3. இகலோக சுகத்தையும், பரலோக சுகத்தையும் அடைவதற்கு சாக்ஷாத்சாதனம் கல்வியேயாதலால் பத்திரிகையானது கல்வியின் சிறப்பைக் கற்றோர் வாக்கினால் அனைவர்க்கும் காட்டி அவர்களைக் கல்விச் செல்வமுடைய தனவான்களாகவும், பொருட் செல்வமுடைய புண்ணியவான்களாகவும், அருட் செல்வமுடைய அரிய ஞானவான்களாகவும் செய்கிறது.

4. பொருளில்லார்க்குப் பூவுலகமில்லையென்று முதியோர் மொழிந்துள்ளபடியால் அப்பொருளைச் சம்பாதிக்குங் காலத்தில் பழிபாவமணுகாமல் நன்மார்க்கத்திலேயே சம்பாதிக்கவும், அங்ஙனஞ் சம்பாதித்த பொருளைத் துர்

விஷயத்தில் செலவிடாது சற்பாத்திரத்தில் செலவிட்டு அதனால் தருமார்த்த காமமோக்ஷமென்னும் புருஷார்த்தங்களைப் புருஷர்கள் பெறவும் பத்திரிகையானது அன்போடு போதிக்கிறது.

5. கலங்கிய நீரைத் தெளிவாகச் செய்யும் தேற்றாங்கொட்டையைப் போலும், பாலையும் நீரையும் வேறுபிரிக்கும் அன்னத்தைப்போலும் பத்திரிகையானது சத்தியம், சாந்தம், கருணை, ஒழுக்கம், பக்தி, முதலிய உத்தம குணங்கள் இன்னதென்பதையும், கொலை, களவு, பொய், காமம், வஞ்சனை, சூது, வம்பு, கோள், முதலிய அதமகுணங்கள் இன்னவை யென்பதையும் அனைவரும் பகுத்தறிந்துகொண்டு தள்ளவேண்டிய துர்க்குணங்களைத் தள்ளி நமக்கு அவசியம் வேண்டியதாகிய சற்குணங்களைச் சந்தோஷமாய்க் கொள்ளும்படி செய்கிறது.

6. காடு முறடாயிருக்கிற கரம்பு நிலத்தை ஏர்பூட்டி யுழுது பயிர் செய்வதற்குச் சாதனமாக்கிக் கொள்வதுபோலப் பத்திரிகையானது கொஞ்சமேனும் நெஞ்சிரக்கமின்றிப் பஞ்சமாபாதகம் புரியும்நெஞ்சுத்தவர்களுக்கும் நாளடைவில் பற்பல நீதிகளைப் போதித்து, அவர்கள் அப்பாவத்துக்கஞ்சி அவற்றை விட்டுப் புண்ணிய கர்மத்தைத்தொட்டு அதனால் ஆண்டவனது அருளைப் பெறும்படி செய்கிறது.

7. பத்திரிகையானது தன்னை அன்போடு வாசிப்பவர்களைப் பிதுர்வாக்கிய பரிபாலனஞ்செய்த ஸ்ரீராமசந்திர மூர்த்தியைப்போலும், தமையனார் வாக்கிய பரிபாலனஞ்செய்த தருமராஜருக் கிளைய சகோதரர்களைப்போலவும், தன் தாய் தந்தையர்களிடத்தும், தமையன்மார்களிடத்தும், குருதெய்வங்களிடத்தும், அரசர்களிடத்தும் மிகுந்த அடக்கமும், பக்தியும் உண்டாகும் வண்ணம் போதனைசெய்து முடிவில் முக்தி அடையும்படி செய்கிறது.

8. குழந்தைகள் மண், சாம்பல் முதலியவைகளைத் தின்று அதனால் மெலிந்து வியாதியுற்றபோது தாயானவள் மருந்தை மதுரமான பலகாரத்தில் மறைத்துக் கொடுப்பதுபோல், கொலை, களவு, முதலிய கொடும்பாவத்தைச்செய்து அதனால் நிலைதவறித் துன்பம் அடையும் நெஞ்சுக்கு பத்திரிகையானது, அப்பாவங்களை பஸ்பமாக்கும் மருந்தாகிய பரம பக்தியையும், ஞானத்தையும், பற்பல விதமான நீதி நியாயங்களிலும், நிர்மலமான இதிகாசங்களிலும் மனதைக் கவரும் கதைகளிலும் நிறைத்துப் போதித்து நிலையாக்கி நித்தியமான இன்பத்தைத் தருகிறது.

9. திகுதிகுவென்று எரிந்துகொண்டிருக்கும் அக்கினியை ஜலமானது எப்படி உபசாந்திப்படுத்துமோ, அப்படியே காமக் குரோதமென்னுங் கடுங் கனலால் வேகும்மனதைப் பத்திரிகையானது (அக்காமக்குரோதங்களை அளவு மீறவொட்டாது அடக்கும் வாறுவுபாயங்களை நல்லோர் வாக்கினால் எடுத்துப் புகட்டி) நல்லகுளிர்ந்த ஜலம்போலவும், பொற்பிரகாசம் போலவும், பூர்ண சந்திரன்போலவும் பொலிந்து விளங்கும்படி செய்கிறது.

10. பத்திரிகையானது பலவித சாஸ்திரங்களினாலும், ஆங்காங்குள்ள பெரியோர்களாகிய பண்டித சிகாமணிகளால் கூறப்பட்ட பரமகாருண்ணியமான உத்தமவியாசங்களினாலும், அவ்வியாசங்களிலமைந்துள்ள அனந்தவிதமான அரியவிஷயங்களென்னும் ரத்தினங்களினாலும் தன்னை அலங்கரித்துக் கொண்டு, ஊரின் மத்தியிலிருக்கும் ஜலம் நிறைந்த தாமரைத்தடாகம்போல, தன்னைப் படிப்பவருக்கும் கேட்பவருக்கும் அக்கணமே அந்த க்ஷணத்தில் குளிர்ச்சியையும் அழகான அறிவையும் அருமையான ஆனந்தத்தையும் அன்போடு அளிக்கிறது.

பற்பலவாய் பகர்ந்தென்ன! பத்திரிகையின் அபிவிருத்தியினாலேயே தற்காலம் பலதேசங்கள் நல்ல நாகரீகமும், செல்வமும், பக்தியும், ஞானமும் ஒழுங்கே பெற்று உன்னதமாய் விளங்குகின்றன. முக்கியமாய் நமது இந்தியாவைவிட எவ்வளவோ சிறிதாகிய ஜப்பான் இவ்வளவு முன்னுக்குவர அவ்விராஜ்ஜியத்தில் நடைபெறும் எண்ணிறந்த பத்திரிகைகளே காரணம் என்று சொல்லத்தடையில்லை. ஜப்பானிலும், மேல்நாடுகளிலும் எழுத்துத்தெரியாத கூலியாட்கள்கூட தமக்கு என்று சில பத்திரிகைகளை வரவழைத்து, இராத்திரிகாலங்களில் வாசிப்பு தெரிந்த ஒருவனுக்கு கூலிகொடுத்து வாசிக்கச் சொல்லித் தாம்கேட்டு அதிலுள்ள விஷயங்களை மனதில்பதித்து ஆனந்தமாய் முன்னுக்கு வந்திருப்பதைக் கவனித்துப் பாருங்கள்.

சகோதர சகோதரிகளே.

எண்ணரிய பிறவிகளில் உயர்ந்தமக்களாய்பிறந்த நாமெல்லோரும் இவ்வருமையான பிறவியில் கல்வி கேள்விகளிற் சிறந்தவர்களாவதற்கும் அக்கல்வி கேள்வியின் பயனாகிய, அறம், பொருள், இன்பம், வீடென்னும் புருஷார்த்தங்களைப் பெறுவதற்கும், புருஷார்த்தவடிவமாக புறப்பட்டுலாவும் உத்தம பத்திரிகைகளைப் பக்தியுடன் வாசித்து நித்தியஞ் சிந்தித்தல் நியாயமான சாதனமாம்.

---

## வியாபாரம்.

இந்த உலகத்திலே செல்வம் பெருகுவதற்குக் காரணமாயிருப்பது வைசியத் தொழிலான வியாபாரமாம். ஐரோப்பிய அமெரிக்க நாட்டாரெல்லாம் மிகுந்த செல்வவந்தராகிப் பெருஞ்சக்தி பெற்று விளங்குவதற்குக் காரணம் வியாபாரமே. உலகத்திலே பெருங் கோடீஸ்வரராய் விளங்குவோரெல்லாம் வியாபாரிகளே யாவர். அமெரிக்காவிலுள்ள கோடீஸ்வரர்களுக்குள் தலைமை பெற்று விளங்கும் ஜான் ராக்பெல்லர் ஒரு பெரிய மண்ணெண்ணெய் வியாபாரியாவார். 'லிப்டன்டீ' என்று பிரசித்தி பெற்று விளங்கும் தேயிலை வியாபாரத்தைக் கைக்கொண்டு அதனால் கோடிக் கணக்கான பணத்தைச் சம்பாதித்துக் கொண்டிருப்பவர் ஸர். தாமஸ் லிப்டன் என்னும் (இங்கிலாந்து) பார்லிமெண்டு மெம்பராவார்.

ஆரம்பத்திலே மிகச்சிறிய நிலைமையில் இருந்து வியாபாரத்தால் கோடீசுவரராய் விளங்குவோர் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் மிகுதி.

வியாபாரமும் கைத்தொழிலும் ஒரு தேசத்தின் செல்வத்திற்கு ஆதாரமாயிருக்கின்றன. இவற்றுள் வியாபாரமே வெளிநாட்டுப் பொருள் நமக்கு வருவதற்கு முக்கிய காரணமாயிருக்கிறது. நமது தேசம் முற்காலத்தில் வியாபாரத்தில் மிகப் பெருமையடைந்து விளங்கியது. நாம் சீனா, பாரசீகம், எகிப்து, கிரீஸ், ரோம் முதலிய நாடுகளுடன் வியாபாரம் செய்தோம். நமது நாட்டுப் பொருள்கள் ரோமிலும் கிரீசிலும் போய் விலையாயின. கப்பல் வியாபாரமும் அக்காலத்தில் பெருக்கமடைந்திருந்தது.

மிகுந்த உன்னத நிலைமையில் இருந்த நமது வியாபாரம் சென்ற சில நூற்றாண்டுகளாக க்ஷீணிக்கத்தொடங்கியது. நமக்குள் உட்சண்டைகளும் அந்நியர்களின் படையெடுப்புகளும் மிகுதியாக, நமது வியாபாரமும் கைத்தொழில்களும் பாழாயின. இப்பொழுது இங்கிலீஷ்காரர் வந்தபின் சில வருஷங்களாக நமது வியாபார முயற்சி சிறிது தலை தூக்கியிருக்கிறது. ஆயினும், நமது பெரிய தேசத்திற்கு ஏற்றவாறு பெரிய வியாபாரங்கள் இன்னும் பெருகவில்லை.

நமது நாட்டுப் பொருள்களை அன்னியர்கள் வாங்கி மிகுந்த லாபம் அடைந்து வருகிறார்கள். நமது தேசத்து வியாபாரம் முழுமையும் நமது கையிலேயே இருக்கும்படியான வேலையைச் செய்யவேண்டும். நமது நாட்டிலே விளையும் பருத்தி, அவுரி, நிலக்கடலை முதலியவற்றை அந்நிய நாட்டார் நம்மிடம் நயமான விலைக்கு வாங்கி, பின் அவற்றைத் துணியாகவும் சாயச் சரக்காகவும், சோப் முதலிய வஸ்துக்களாகவும் மாற்றி நம்மிடம் தகுந்த விலைக்கு விற்றுப் பெருத்த லாபத்தை அடைந்து வருகின்றார்கள். நமது நாட்டுப் பொருள்கள் அந்நிய நாட்டுக்குச் சென்று அங்கேயிருந்து மீண்டும் நமது தேசத்திற்கு வந்து விலையாகாவாறு நமது வியாபாரிகள் வேலை செய்ய வேண்டும். நமது நாட்டுப் பருத்தி இங்கிலாந்திற்குச் சென்று அங்கே வஸ்திரமாக்கப்பட்டு பின் நமது நாட்டுக்குவந்து விலையாகின்றது. நமது நாட்டிலேயே ஏராளமான நெசவுத் தொழிற்சாலைகள் இருந்தால் எத்தனை லாபம் உண்டாகும்? இந்த லாபம் நமக்குக் கிடைக்காமற் போவதன்காரணம் கைத்தொழில் விஷயத்தில் நாம் சிரத்தையற்றிருப்பதே.

வியாபார முறைகள் நம்மில் அநேகருக்குத் தெரியாது. 'கீரைக் கடைக்கு எதிர்க்கடை போடுதல்' போன்ற சிறிய வேலைகளிலே நம்மவர்கள் கைத்தேர்ந்தவர்கள். ஒருவன் ஒரு வியாபாரத்தையோ, கைத்தொழிலையோ தொடங்கிச் சிறிது லாபம் அடைவதாகத் தோன்றினால் அதே வியாபாரத்தை அல்லது கைத்தொழிலையே மற்றொருவனும் தொடங்கி விடுகின்றான். அதனால் இருவர் பாடும் கேடாய் முடிந்து விடுகின்றது. இது நம்மிடம் உள்ள அறியாமைகளுள் ஒன்று.

மற்ற நாட்டாரெல்லாம் கைக்கொண்டுள்ள பெரிய வியாபார முறைகளை நாமும் பின்பற்ற முயலவேண்டும். பெரிய வியாபாரங்களில் பணத்தைப் போடுவதற்கு நம்மவர்கள் அஞ்சுகிறார்கள். இத்தகைய அச்சம் உள்ளவர்கள் வியாபாரத்தில் பெருமையடைய முடியாது. ஏனெனில், தைரியமுள்ளவர்களுக்கே தனலக்ஷ்மி வசமாகின்றாள். ஐரோப்பியர்கள் தங்கள் வியாபாரங்களில் முன் பணமாகச் செலவிடும் பணத்தைக் கவனித்தால் மிகுந்த ஆச்சரியமாயிருக்கும். (ரெயில்வே) இருப்புப் பாதைகளிலும் மற்ற முயற்சிகளிலும் ஐரோப்பியர்கள் எவ்வளவு பணத்தை முன்பணமாக வாரி இறைக்கிறார்கள்! பெரிய முதல் வைத்துப் பெரிய வியாபாரம் செய்வோருக்கே பெரிய ஊதியம் கிடைக்கிறது. வியாபாரம், கைத்தொழில் முதலிய முயற்சிகளில் நாம் ஐரோப்பியரின் முறைகளைப் பின்பற்றி வேலை செய்ய வேண்டும். ஒரு தேசத்திலே செல்வம் பெருகி, அதனால் ஜனங்களுக்குச் சகல நன்மைகளும் உண்டாவதற்குக் காரணமாயிருப்பவை வியாபாரமும் கைத்தொழிலுமாகவே யிருக்கின்றன. செல்வத்திற்குரிய தெய்வமான குபேரனுக்கு வியாபாரமும் கைத்தொழிலும் இரண்டு கண்கள் போல விளங்குகின்றன. இதனை அறிந்து நம்மவர்கள் வேலை செய்யவேண்டும்.

இத்தகைய விஷயங்களில் நாம் ஐரோப்பியரைப் பின்பற்றி க்ஷேமமடைவதைவிட்டு வீணாக அதிக செலவு செய்யும் விஷயங்களில் மட்டும் அவர்களைப் போல் வேஷம் போட்டுக்கொள்ள முயல்வதால் நமக்கு மடமையே இன்னும் பெருகுமேயன்றி வேறில்லை யென்பதை நாம் நன்குணர்தல் வேண்டும்.

---

# மோக்ஷ சாதனம்

## மானசபூஜை.

மானசபூஜையும் மோக்ஷத்தை யடைதற்கு ஒரு வழியேயாகும். அதாவது அவ்வழியிற் சென்றாலும் முடிவில் பிறப்பிறப்பில்லா மோக்ஷ வீடென்னும் நித்தியானந்தப் பெருவாழ்வில் கொண்டுபோய்ச் சேர்க்கும்.

மானசபூஜை யென்பது கடவுளை மனதினால் வழிபடுவது. நமது செய்கைக்குக் காரணம் மனமே யென்றும், அதனால் நாம் எந்த நோக்கத்தைக் கொண்டு ஒரு காரியத்தைச் செய்கிறோமோ அந்த நோக்கத்தின்படி நமக்குப் பலன் கிடைக்குமே யல்லாமல் செய்கையின் படிக்கல்லவென்றும் முன்னமே கூறியிருக்கிறோம்.

நீ நடுக்காட்டில் மறைந்திருந்து ஒருவனைக் கொல்ல முயல்கின்றாய். அவன் ஓடிப்போய் ஒரு மலைக்குகையில் ஒளிந்து உன் கைக்கு அகப்படாமல் தப்பித்துக் கொள்கிறான். அக்குகையில் அவனுக்குப் பொன் நிறைந்த ஒரு பெரிய ஜாடியகப்படுகிறது. அவனுக்கு அது அகப்பட்டதற்கு நீயே காரணமாயினும், அவனைக்கொல்ல நினைத்ததற்குத் தகுந்த தண்டனைமட்டுமே யுனக்குக்கிடைக்குமேயன்றி, அவன் செல்வவந்தனானதற்கு நீ காரணமாயிருந்ததற்காக உனக்கு ஒரு நற்பலனும் கிடைக்காது.

அதைப்போல் கந்தனைப் புலிபிடித்துக்கொள்கிறது. நீ யவனைக் காப்பாற்றவெண்ணி புலியைக் குறிபார்த்துச் சுடுகிறாய். கந்தனும் புலியும் ஒருவரையொருவர் பற்றிப் புறண்டுகொண்டிருந்ததால் குண்டு புலிமேல் படாமல் கந்தன் தேகத்திலேயே பாய்ந்து அவனைக் கொன்றுவிடுகிறது. நீ கந்தனைக்கொல்ல நினைத்துச் சுடவில்லை. காப்பாற்ற நினைத்தே சுட்டதால் அவன் உன் கையால் மாண்டானெனினும் நீ தண்டிக்கப் படுவதில்லை.

ஆகையால் நாம் செய்யும் செய்கையின் பலன் நமது மனோ நிலைமையைப் பொருந்தியது. அதுவே நமது பாபபுண்ணியங்களுக்கு உற்பத்திஸ்தானம். எனவே வெளியில் கோயிலுக்குச் சென்று கடவுளுக்குச் சரியை கிரியைகளாலாய உபசாரமனைத்தும் செய்து பூஜிப்பதினாலும், மனதில் அவ்வாறு செய்வது மிக்க மேலானது.

ஒருவன் ஒரு கோயிலைக்கட்டி அதில் கடவுளை விக்ரக உருவமாய் ஸ்தாபனம் செய்து அதற்கு ஆகமவிதிப்படிச் செய்ய வேண்டிய கும்பாபிஷேகம் முதலியயாவும் செய்து, விக்ரக மூர்த்தங்களுக்கு வேண்டிய பணியணியாவும் சமர்ப்பிக்கவேண்டுமாயின் எவ்வளவோ பணம் வேண்டும். ஆனால் மனதினால் அவையாவும்செய்யப் பணம்வேண்டுவதில்லை. வேறொருவர் உதவியும்வேண்டுவதில்லை. நமக்கு வேண்டிய உபகரணம் யாவும் ஒரு நொடியில் நம்மனதினால் சிருட்டிக்கப்படும். இத்தகைய பூசையால் பலனும் அதிகம்.

நேயர்களே! இப்போது உங்கள் மனதில் ஒரு பெரிய சந்தேகம் உண்டாகலாகும். அதாவது இதுவரை கூறப்பட்ட மோக்ஷசாதனங்களில் மனதை யடக்கி யொடுக்கித் தன்னை யறிந்து தலைவனிற் கலப்பதே சரியான வழியென்று கூறிவிட்டு, இப்போது கோயில் என்றும் விக்ரகமென்றும் சரியை கிரியை யென்றும் பிரஸ்தாபிப்பது என்ன காரணமோ, அது உண்மையோ இது உண்மையோ, என்று இவ்விதக் கலவரங்களும் கேள்விகளும் உண்டாகலாம். ஆகையால் அக்கலவரங்களை நீக்குமாறு ஈண்டு சுருக்கமாய்ச் சிலவிஷயங்களைக் கூறிவிட்டுப்பின்பு மானசபூசையைப்பற்றி தெளிவாய் விவகரிப்பாம்.

முதலாவது ஒன்று கூறுகிறோம். நாம் ஒரு கட்சியையாவது, பாரபட்சமாகிய ஒரு வகுப்பையாவது சேர்ந்த ஆளல்ல. எக்கட்சியும் நமக்கு விரோதமானதுமல்ல. நாம் ஒன்றின் சார்பாகவேயாவது, ஒன்றுக்கஞ்சியாவது, வாக்கு சாதுர்யத்தால் ஒன்றை ஸ்தாபித்து மற்றவற்றைக் கண்டிக்க வேண்டிய அவசியமாவது இல்லை. சமயத்திற்குத் தக்கப்படி ஒரு விடத்தில் உலகம் அநித்தியமென்றும், மற்றொரு விடத்தில் நித்தியமென்றும் வாதிக்கவேண்டிய அவசியம் நமக்கில்லை. உண்மை யெப்போதும் உண்மையே. தர்க்கவாத சாமர்த்தியத்தால் ஒருவன் காகம் கறுப்பல்லவென்றுகூட நிரூபிக்கலாகும். ஆயினும் அது கறுப்பு கறுப்பே. ஒருபோதும் வெண்மையாகாது. நமது முன்னோர் கூறியதைக் கூறுவதற்கு நாம் அஞ்சவேண்டுவதேன். ஒன்றுமேயில்லை. நித்திரையில் எழுப்பிக் கேட்டாலும் அந்த ஒரே உண்மை வெளிவருமேயன்றி சமயோசிதப்படி பேசவேண்டுமென்று மாறானதொன்றும் வெளிவராது.

நாம் மோக்ஷசாதனமென்ற வியாசத்தில் கூறியதுதான் முடிவான உண்மை. ஆனால் ஜீவகாருண்யம், ஈசுரபக்தி, பாசவைராக்கியம் முதலிய சாதனங்கள் கைவந்தவர்களே அம்மார்க்கத்தின்படி அப்பியசித்து மோக்ஷமடையக் கூடிய அதிகாரிகள் என்று முன்னமே கூறியிருக்கிறோம். அம்மார்க்கம் எடுத்ததே நானே பிரமம், என்னைவிட வேறு கடவுளில்லையென்கிற திமிர வேதாந்தமுமல்ல, என்றைக்கும் கடவுள் வேறேயே, நான் வேறேயே என்ற திமிர சித்தாந்தமுமல்ல. அது வேதாந்த சித்தாந்த சமரசமான மார்க்கமென்று கூறப்படும், அதாவது அது மதாதீதமான கொள்கை யென்றும் கூறலாகும்.

ஆனால் இவ்வுலகிலுள்ள அதிகாரி பேதங்களை நோக்க மேற்கண்டபடி சாதனங்கள் கைவந்தவர்கள் ஆயிரத்தில் ஒருவர் கிடைப்பது அருமை. ஆகையால் பெரும்பாலோர் ஆரம்பத்திலேயே அந்தமார்க்கத்தில் பிரவேசித்தால், அந்தோ, உள்ளதும் கெட்டுப்பெரும் பாதகத்திற்கு ஆளாகி விடுவார்களென்பது உண்மை.

சிலர், "எல்லாம் பிரம்மமயம். ஆகையால் கோயிலுக்குச் செல்லலாகாது. விக்ரகத்தை வணங்கலாகாது. அந்தணனைக்கொண்டு எச்சடங்கும் செய்யவேண்டிய அவசியமேயில்லை. விக்ரகங்களைப் பூசித்தால் பாபம்" என்று கூறி 'தான் கெட்டவன் ஊரையும் கெடுத்த' கதையாய் யாவரையும் நாஸ்திகராக்கப் பார்க்கிறார்கள். கோயிலுக்குச்சென்று விக்ரக ஆராதனைசெய்வதால் பாபமா புண்ணியமா வென்பதைப்பற்றி பிறகு சுருதி யுக்தி அனுபவமாய் ஆராய்ச்சி செய்வாம். முன் நானே பிரம்மம் யாவும் பிரம்மம் என்று வாய்ப்பறையறையும் இந்தக் குட்டிப்பிரம்மங்கள் என்ன நிலைமையிலிருக்கின்றனவென்று கவனிப்போம்.

மராமத்து இலாகா (P. W. D.) வில் 120 ரூ. சம்பளத்திலிருக்கும் ஒரு உயர்தர உத்தியோகஸ்தர் ஒருவர் நமக்கு ஒருகாலத்தில் நண்பரா யிருந்தார். அவர் மேற்படி பிரம்மக்கட்சியைச் சேர்ந்தவர். நெற்றியில் ஒன்றுமணிவதில்லை. கோயிலுக்குச்சென்று விக்ரகத்தை வணங்குவதில்லை, பிதுர்க்கடன் ஒன்றும் செய்வதில்லை. பிராம்மணர் என்ற பெயரைக்கேட்டாலே அவருக்குக் கோபம் வந்துவிடும். அவர் இப்போதும் இருப்பதால் பெயரைக்கூறாது விடுக்கிறோம். அச்சமயம் நாம் தினந்தோறும் மாலைப்போதில் கோயிலுக்குச் சென்று ஈசுவரதரிசனம் செய்துவரும் வழக்கத்திலிருந்தோம். அந்த சிநேகர் ஒருநாள் நம்மைக்கண்டு எங்குபோய் வருகிறீர்கள் என்றார். நாம் கோயிலுக்கு என்றோம். பிறகுஇருவர்களும் அடியிற்கண்ட சம்பாஷணை நடந்தது:—

**நண்பர்:**—தாங்கள் இவ்வாறு எத்தனை காலமாய் கோயிலுக்குச் சென்று வருகிறீர்கள்? எவ்வளவோ சாத்திரங்களை யாராய்ச்சிசெய்த தாங்கள் இன்னும் இந்த அஞ்ஞானமார்க்கத்தை விடாதிருப்பது மிக்க விசனமான காரியம்.

**நாம்:**—பின் பாகத்திற்குப்பதில் கூறாமல், "நான் ஐந்தாறு வருடங்களாய் இப்படி நடந்து வருகிறேன். நேற்று இரவு தங்களையும் தங்கள் கூட்டத்தைச்சேர்ந்த இன்னொருநண்பரையுங்கூட கோயிலில்கண்டதுபோல் தெரிகிறது" என்றுமட்டும் கூறினோம்.

**நண்பர்:**—நாங்கள் அக்கட்டிடத்திலிருக்கும் கற்சிலையில் கடவுள் இருக்கிறாரென்று மூடத்தனமாய் நம்பிக்கொண்டு அங்குவரவில்லை. அங்கு மேளம் வாசிப்பவர்களில் நாகசுரக்காரன் மிக்க நேர்த்தியாய் வாசிக்கிறான். அதைக்கேட்க வந்தோம். தாங்கள் ஐந்தாறு வருடமாய்த்தினம் அங்கு சென்று அந்தக்கல்லைக் கும்பிட்டு வருவதால் என்ன பலனடைந்தீர்கள்?

**நாம்:**—தாங்கள் கூறியது போல் சிலர் நாகசுரம் கேட்க வருவதுண்டு, சிலர் கோயிலில் கும்பாலத்தியெடுக்கும் தேவதாசியின் வனப்பைக்காண வருவதுண்டு. தங்களைப்போல் அஞ்ஞானம் நீங்கினோர் சிலர்க்குக் கடவுள் அங்கில்லையென்று நல்ல ஞானம் வந்துவிட்டாலும், என்போல் அஞ்ஞானம் நீங்கப்பெறாத அனேகர் எங்குமுள்ள கடவுள் அக்கல்லுருவிலும் உளர் என்று நம்பி, அவரை யுருவற்றநிலை அதாவது அருவநிலையில் தியானிக்கச் சக்தியில்லாததால் ஒரு உருவமாய்ப் பாவித்து தியானிக்கிறார்கள். அஞ்ஞானம்நீங்கிக் கோயிலில் கடவுள் இல்லையென்று தெரிந்துகொண்டதால் தாங்கள் அடைந்த பலனைத் தயவுசெய்து முன்னே கூறுங்கள், பிறகு நான் கூறுகிறேன்.

**நண்பர்:**—நண்பரே, உண்மை யென்னவெனில் உலகம் முதலாக யாவும் பொய்யே. பிறப்பிறப்பென்பதும் பாபம் புண்ணியமென்பதும் யாவும் பொய்யே. நாமே பிரம்மம், யாவும் பிரம்மமயமே.

**நாம்:**—அவ்வாறு எண்ணிக்கொள்வது மட்டுமே போதுமோ, அதைவிட வேறே யேதேனுமிருக்கிறதோ?

**நண்பர்:**—நாம் பிரமம், யாவும் ஒரே பிரம்மமயம் என்ற உண்மையை யறிந்துகொண்டால் அவன் ஆன்மா தேகத்தைவிட்டு நீங்கியதே பிரம்மமாகவே ஆய்விடுகிறது.

**நாம்:**—சரிதான். நாம் ஆடு கோழி முதலியவற்றை இம்சித்துத் தின்கிறோமே அது பாபமல்லவோ.

**நண்பர்:**—அந்த பேதபுத்தியை விட்டுவிடும். அதனைத்தும் சீவயிச்சை. நாம் வேறு ஆடு வேறு என்று எண்ணவேண்டாம். அதுவும் நாமும் இரண்டும் பிரம்மமே. தின்னுவதும் தின்னப்படுவதும் இரண்டும் பிரமமே யாகவிருக்க பாபமேது. நாம் வேறொன்றை யிம்சித்தாலல்லவோ. எல்லாம் நாமாகிய பிரமமே.

**நாம்:**—"ஆகா. இதுமிக உயர்ந்த ஞானமே. ஆனால் புலி யியற்கையாய் மாமிசபட்சணி. அது மனிதரைத் தின்கிறதென்று அதைக்கொன்று விடுகிறார்கள். அதைவிட அதுவும் ஒரு பிரம்மமாதலால், தானியம் காய்கனி கிழங்கைத்தின்று ஜீவிக்கக்கூடிய இந்த மனிதப்பிரம்மம் ஆட்டுப் பிரம்மத்தைத் தின்பதைவிட, மாமிசமே தின்னும் புலிப்பிரம்

மத்திற்கு மனிதப்பிரம்மம் தன் தேகத்தில் கொஞ்சம் கொடுத்து பசியாற்றலாமே. அதோடு இன்னொரு சந்தேகம் அடியேனுக்கு, அதற்காகக் கோபிக்கவேண்டாம். அதாவது எல்லாம் பிரம்மம்தான். தங்களைப்போல் தங்கள் குதிரைக்காரனும் பிரம்மமே. தங்கள் மனைவியும் பிரம்மமே. அந்த மனைவிப் பிரம்மத்தை குதிரைக்காரனாகிய பிரம்மம் கொண்டுபோனால் தாங்களாகிய பிரம்மத்திற்கு ஒரு வித்தியாசமும் தோன்றாதல்லவா ?" என்றோம்.

இதைக்கேட்டதே அந்த நண்பர்க்கு மிக்க கோபம் வந்துவிட்டது. சே, சே இப்படியா பேசுவது, என்றார். "ஓகோ மன்னிக்கவேண்டும். இந்தப்பிரம்மத்திற்கு கோபம் வருமென்று நமக்குத்தெரியாது. எல்லாம் ஒன்றாய் நினைக்கும் பிரம்மத்திற்கு மனைவி விஷயத்தில் மட்டும் பிரம்மக்கியானம் தூரப்போய் விட்ட காரணம் என்னமோ அதைத் தயவுசெய்து சிந்தித்துப் பார்ப்பது நலம் '' என்று கூறிவிட்டுப் பிறிந்து சென்றோம்.

இதே கூட்டத்தைச் சேர்ந்தவர் இன்னொருவர் இருந்தார். அவர் 300 ரூபாய்க்கு அதிகம் சம்பளம் வாங்குபவர். அவரும் கோயில், விக்ரகம், பிராம்மணன் என்று கேட்டாலும் மிக்க வெறுப்படைபவர். நெற்றியில் திருமண் காப்பணிவதையும் விட்டு விட்டார். ஆனால் தினம் காலையில் அப்பத்திற்குக் கூட மாமிசம் வேண்டும்.

இதனால் வாசாஞானமாகிய பிரம்மக்கியானம் பயன்படாது. நாம் முன் கூறியதுபோல் ஏககாலத்தில் மனதை யடக்கிக் கடவுளை யருவநிலையில் காண வல்லமை யுடையவர்கள் ஆயிரத்தில் ஒன்றுகிடைப்பது அரிது. ஆகையால் பக்தியோடு கூடிய சாதனங்கள் கைவராதார்க்கு வேதாந்தம் பெரும்பாலும் கெடுதியையே யுண்டாக்கி விடுகிறது. அதிலும் குருமுகாந்தரமன்றித் தாமே பயில்வோர்க்கு இன்னும் மிக்க கெடுதியே.

வீட்டின் மேல் தளத்திற்குச் சென்றால் கடலைக்காணலாம். ஏககாலத்தில் மேல் தளத்திற்குத் தாண்டிப்பாய சக்தியில்லை. என்ன செய்வது? ஏணி வைத்துப் படிப்படியாய்த்தான் ஏறிச்செல்லவேண்டும். அடையவேண்டியது மேல் தளமேயாதலால் நான் ஏணிப்படியில் ஏறமாட்டேன், அது அவசியமல்லவென்று ஒருவன் கூறுவானாயின் அவனை மூடனென்று நினைப்பதற்குச் சந்தேகமென்ன ? மேல் தளத்தைச் சேர்ந்தபின் ஏணி அனுவசியந்தான்.

இதைப்போலவே முதலிலேயே கடவுளின் அருவநிலையில் மனதை நிலைக்கச் செய்ய சக்தியில்லாதவர்க்கெல்லாம் ஏணியாகிய சோபானங்கள் வேதத்தில் கூறப்பட்டிருக்கின்றன. அந்த ஏணியில் படிகள் நான்குள்ளன. அவைகளுக்குச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று பெயர். மாடியின் மேல் தளத்தில் ஏறிவிட்டவனுக்கு ஏணி யெப்படி அவசியமில்லையோ அப்படியே ஞானத்தையடைந்தவனுக்கு சரியையாதிதேவையில்லை. (தொடரும்)

---

## சிறுவர்கள் பக்கம்

### தைரியமுள்ள சிறுவன்.

குழந்தைகளே !

நீங்கள் யாவரும் புகைவண்டியில் பிரயாணம் செய்யும்போது, மயிலுக்கொருவன் இருப்பதைப் பார்த்திருக்கலாம். அவனை மயிலாளி என்பார்கள். அப்பேர்ப்பட்ட ஒரு மயிலாளிக்கு ஒரு பிள்ளை

யுண்டு. அவனுடைய பெயர் கோவிந்தசாமி. ஒரு நாள் அச்சிறுவன், வழக்கம்போல் காலை 5½ மணிக்கு எழுந்து, ரயில்பாதைக்கு வந்தான். அப்பொழுது, தண்டவாளங்கள் யாரோ ஒருவனுடைய சூதாலோ, அல்லது வேறு யாதுகாரணத்தாலோ வழக்கப்படியிருக்கும் இடத்தில் இராமல் சற்று விலகியிருப்பதைப் பார்த்தான்.

தன் தகப்பனிடம் போய்சொல்லலா மென்று நினைத்து ஓட எத்தனித்தான். அதற்குள் ரயில்வரும் சத்தம் கேட்டது. வண்டியும் பையன் அருகில் வந்துவிட்டது. பாவம், என்ன செய்வான்! தகப்பனிடம் போய்ச் சொல்லவோ சாவகாசமில்லை.

பின், இருதண்டவாளங்களுக்கும் நடுவேயிருந்துகொண்டு தன் உயிரைக்கருதாமல் கைகளை நீட்டினான். ரயில் வண்டி ஓட்டுபவன் (Driver) பையனைப்பார்த்து ஒதுங்கும்படி ஜாடைசெய்தான். ஊதவும் ஊதினான். பையனோ அவ்விடத்தினின்று அசைபவனாய்க் காணோம்.

வண்டி ஓட்டுகிறவனுக்குக் கோபம் வந்துவிட்டது. வண்டியை நிறுத்திப் பையனருகிற்சென்று கையை ஓங்கினான். சிறுவன் புன் சிரிப்புடன் தண்டவாளத்தைக் குறித்துக்காட்டினான். வண்டியோட்டுபவனுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. சிறுவனின் சாமர்த்தியத்திற்கு மெச்சி, அவனுக்குத் தன் பணத்தைக்கொண்டே ஒரு மெடல் பரிசளித்தான்.

சிறுவனின் தைரியத்தைப் பார்த்தீர்களா? இந்த மாதிரியான சந்தர்ப்பங்கள் கிடைப்பது அரிதிலும் அரிது. ஆகையால், அச்சமயங்கள் கிடைத்தால், முட்டாள்தனமாய் கைவிட்டுவிடாது நமது தைரியத்தையும் சாமர்த்தியத்தையும் காட்டவேண்டும்.

## மாணவர் கவனிக்கவேண்டிய சில விதிகள்

1. பாடசாலைக்குச் செல்லும்போதும் அங்கிருந்து வீட்டிற்குத் திரும்பி வரும்போதும் வழியில் விளையாடிக்கொண்டே செல்லாமல், அடக்கமாய்ச் செல்லவேண்டும். அப்படிக்கின்றேல் இடைவழியில் பலவித ஆபத்துகள் நேரிடலாகும்.

2. ஒருவரை யொருவர் விளையாட்டிற்கேனும் கெட்ட பாஷைகளால் வைவது மிகக் கெட்டபழக்கம். விளையாட்டிற்கேனும் பொய் கூறுவதும், ஒருவர் பொருளை யெடுத்து மறைத்து வைப்பதும் மிக்க கெட்ட வழக்கம். இதனால் ஆபத்துமுண்டாகும்.

3. என்னேரமும் கேலியாகவும் அகசியமாகவும் பேசுகிறவர்கள் முட்டாள்கள் என்றே மேலோர் கூறியிருக்கின்றனர். திருட்டாந்தமாய் அகசியக்காரனுக்கு ஆங்கிலத்தில்கூட Buffoon (பப்பூன்) என்றும் Fool (பூல்) என்றும் பெயர். Fool என்ற பதத்திற்குச் சாதாரண அர்த்தம், முட்டாள், அறிவிலி என்பதே.

4. விளையாட்டிற்காக ஒருவரை யொருவர் அடித்துக்கொள்வது மிக்ககெட்டவழக்கம். அதனால் அனேகர் தீமைக்குள்ளாகி யிருக்கிறார்கள். இதற்காகவே "விளையாட்டு வினையாய்முடியும்" என்ற பழமொழி கூறப்படுகிறது.

5. முதியோரையும், ஏழைகளையும் பரிகாசம்செய்தல், பைத்தியக்காரன்மேல் கல்லெறிதல் இத்தகைய சேஷ்டைகளெல்லாம் கெடுதியை யுண்டாக்குவதோடு பாபத்தையும் தரும்.

6. நாம் மிக்க புத்திசாலி, படிப்பில் நாமே கெட்டிக்காரன் என்று ஒருபோதும் மமதை கொள்ளலாகாது. எப்போதும் நமக்கு மேல் படித்தவர்கள் அனேகர் இருக்கிறார்களென்பது உண்மை.

7. நமது முன்னோர் ஏற்படுத்தியிருக்கும் ஜாதியாசாரம் மதாசாரங்களை விடாமல் பின்பற்றி நடப்பதுதான் நமக்கு எப்போதும் கௌரவத்தைத்தரும் என்பதை மறக்கலாகாது.

8. "நாம் வாசிக்கும் புத்தகங்களில் கூறப்படும் புத்திமதிப்படி நடக்காவிட்டால் நாம் வாசிப்பதால் ஒருபயனையும் அடையமாட்டோம்." என்பதை யெப்போதும் மனதில் வைக்கவேண்டும்.

9. நாம் எங்கு சென்றுகொண்டிருந்தாலும் வழியில் தேவாலயத்தையும் நமக்குத்தெரிந்தபெரியோரையும் காணுந்தோறும் நின்று பக்தியோடு நமஸ்காரம் செய்யவேண்டும்.

10. நமது உபாத்தியாயர், தாய்தந்தையர் முதலியோர் யாரைத் துஷ்டப்பிள்ளையென்று கூறுகிறார்களோ அத்தகைய பிள்ளைகளோடு சகவாசமே செய்யலாகாது.

---

## ஸ்திரீகள் பக்கம்

## பாரத தேவியின் பெருமை

சகோதரிகளே !

இதோ புது வருஷமாகிய உத்தராயண புண்ணியகாலம் வருகிறது. உங்கள் மக்களையும் மருமக்களையும் உங்கள் வீட்டுக்கழைத்து விருந்து (புதுமை) செய்யவோ, அல்லது விருந்துச் சாமான்களை அவர்கள் வீட்டில் கொண்டுபோய் இறக்கவோ செய்யும் காலம் இதோ வரப்போகிறது.

இந்த ஒரு வருஷகாலமாகப் பழகிவந்த மட்பாத்திரங்களையெல்லாம் பழையவை, ஏழைகள் எடுத்து ஆளட்டும் என்று கழிக்கப் போகின்றீர்கள்.

வீடு புதுக்கி, புதுப் பாத்திரங்கள் வாங்கி ஆளப்போகின்றீர்கள்.

உங்கள் வீட்டுத் தெய்வம்,—ஏன் ? நாட்டுத் தெய்வமேயாகிய பசுக்களைக் குளிப்பாட்டி, மஞ்சள் பூசிக் குங்குமமிட்டு அவற்றை

யில்லாதார்க்கும் தரிசனம் அளிக்கத் தம்போக்கில் அலையவிடப்போகின்றீர்கள்.

உங்கள் சகோதரர்களும், தமது காலைகளைக் கட்டுத் துறையினின்றவிழ்த்து, ஸ்நானம் செய்வித்து, கோலங்களிட்டு, ஆடை புனைந்து, அணிகளணிந்து ஊர்ப்புறங்களில் உள்ள புது நாற்றுக்களை உண்டு களிக்க விரட்டப் போகின்றார்கள்.

இப்படிப் பலவகையிலே புது வருஷத்தை பாரதமக்களாகிய நீங்கள் கொண்டாடிக் களிக்கும் இந்த அவசரத்தில், சகோதரிகளே, ஒருவேளை எங்கே ஈ, எறும்பு, ஊர்க்குருவிமுதலிய நமது பிராணித் தோழர்களை மறந்துவிடப் போகிறீர்களோ என்றபயம் எனக்கு உண்டாயிற்று. அதை ஞாபகமூட்டவே இத்தனை முகவுரை கூறினேன். சகோதரிகளே,

தருமதேவதையின் புத்திரிகளாகிய நீங்கள் உங்கள் கொண்டாட்டத்தை உலகமெல்லாம் சேர்ந்து அநுபவித்தாலொழிய திருப்தியடைய மாட்டீர்களல்லவா ?

அன்றியும், அடுத்தவேளைக்கு எவன்வீட்டில் அன்னத்துக்கில்லையோ அவனே உயர்ந்தவன், எல்லாராலும் தொழற்கு உரியவன், அழகிய அருளாளன், (அந்தணன்) பிரமத்தை யறிந்தோன். (பிராம்மணன்) முடிவு பார்ப்போன் (பார்ப்பான்) என்று எத்தும் நாட்டிலே பிறந்த உங்களுக்கு இத்தர்மகுணம் மறநது போகுமா ?

புதுப்புது தானியங்கள் பூமிதேவித்தாய் அளிக்கப் போகின்றனள். பழையது, மிஞ்சியது எவற்றையும் ஏழைகளுக்குப் பங்கு வையுங்கள். "பாத்தூண் மரீ இயவனைப் பசியென்னும்—தீப்பிணி தீண்டலரிது' "ஆகாரத்தைப் பிறர்க்குப பங்கிட்டுக்கொடுத்துப் புசிக்கும் வழக்கமுடையவனைப் பசிநோய் தீண்டமாட்டாது" என்பதே இதன்பொருள். ஊரார் பிள்ளையை ஊட்டிவளர்த்தால் தன் பிள்ளை தானே வளருமல்லவா ?

உங்கள் கண்ணுக்குத் தென்படும் சகல சிறு பிராணிகளும் உண்டு களிக்க அரிசியை மாவாக்கி வீடெல்லாம் வீதியெலலாம் அள்ளி இறைப்பீர்களே ! அதுவும் செய்யுங்கள். மார்கழிமாசம் தானே அத்திருவிழாவை, அவ்வன்னதானத்தை விசேஷமாகக் கொண்டாடும் காலம்! இதோ பிறந்துவிட்டது! மறந்துவிடாதீர்கள் !

தாமரைக் குளம், படிக்கட்டு, தலையணை, மச்சம், என்று என்னென்னமோ கோலங்கள் பச்சரிசிமாவைக்கொண்டு இயற்றி வீட்டையும், வாசலையும் வீதியையும் அழகாக்கும் உங்கள் கை விசித்திரம் எங்கே பார்ப்போம் !

ஐயோ, தர்மதேவதையின் புத்திரிகளே, உங்கள் பழைய பெருமையை எண்ணி, உங்கள் புதுமையைப் பார்க்க வயிறு பகீரென்கின்றதே.

சில பெண்கள் கோலங்கள் போடக் கல்பொடியையும் காரைத் தூளையும் அன்றோ உபயோகிக்கின்றனர்! அடடா! எல்லாம் பெயர் மாத்திரமாய்ப் போய்விட்டனவே. ஊம். அவற்றை யெல்லாம் எண்ணினால் நெஞ்சு வெடித்து விடும்போ லிருக்கிறது. இந்த நல்ல காலத்தில், வருஷ ஆரம்பத்தில் அவற்றைப்பற்றி அதிகமாகப் பேச வேண்டாம்.

தாய்மார்களே,

மறந்து விடாதீர்கள், கல்பொடியைக் கோலமாக இட்டு, பிச்சைப் பாத்திரத்தில் மண்ணைப்போடாதீர்கள். அரிசி மா அரைத்து, கோலங்கள், உருவங்கள் அமைக்க அறியாவிடினும், முற்றம் தெளித்து வீடு மெழுகியதும், அள்ளி அள்ளி இம்மாவில் தெளியுங்கள், இறையுங்கள். எறும்போ, ஈயோ, குருவியோ, கோழியோ பொறுக்கித் தின்று, வரும் புது வருஷத்தை உங்களோடு சேர்ந்து கொண்டாடிக் களிக்கட்டும். ஆமாம், நம் நாட்டுப் புழுக்களும் கூடப் பட்டினி கிடத்தல் ஆகாது. தகாது. புருஷர்கள்—நவீன நாகரீகத்திலே தலை நுழைத்து எவற்றிற்கும் பலனை எதிர்பார்த்தே காரியங்கள் செயயவேண்டும் என்ற கோட்பாடுடைய புருஷர்கள்— இது தவறு, வீண் செலவு அறிவற்ற அருள் என்று இகழ்வாராயினும் நீங்கள் இத்தருமத்தொழிலைக் கைவிடாதீர்கள். தர்மதேவதைகளின் அம்சங்களே, இதை மறக்காதீர்கள். நமது முன்னோர் ஆசார ஒழுக்கங்களைக் கைவிடாது போற்றவேண்டுவது உங்கள் கடமை யென்பதை மறவாதீர்கள்.

சகோதர சகோதரிகளே! இதோடு நமக்கு மாதந்தோறும் வந்து எண்ணிறந்த அரிய இலௌகிக ஆன்மார்த்த விஷயங்களையும் புத்திமதிகளையும் புகட்டும் நமது ஆனந்தபோதினிக்குப் புது வருடத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சந்தாதாரரையாவது கட்டாயம் சேர்த்து அதன் விர்த்திக்காக உழைத்துப் புண்ணியப் பேறடைய வேண்டுமென்று கங்கணங் கட்டிக்கொள்ளுங்கள். மறவாதீர்! மறவாதீர்!! மறவாதீர்!!!

---

## பதிவிரதைகளின் மகிமை.

தாயே உயர்ந்தவளென்று சிலரும், தந்தையே உயர்ந்தவரென்று சிலரும் சொல்லுகிறார்கள். புத்திரனுடைய உற்பத்திக்காகத் தாயார் வெகு வேதனைகளை அனுபவிக்கிறாள். தந்தையோ தானம் தேவபூஜை முதலியவை செய்து பிள்ளை பிறக்கவேண்டுமெனத் தவம் புரிகிறான். பிறந்த பின்பு இவன் நடத்தையையும் அதிர்ஷ்டத்தையும் பற்றி இருவருமே சிந்திக்கிறார்கள். இவனுக்குப் புகழ், பொருள், ஆயுள், ஆரோக்கியம் முதலியவை உண்டாக வேண்டுமென்று இருவருமே இஷ்டதேவதைகளை வேண்டிக்கொள்ளுகிறார்கள்.

அப்படிப்பட்ட தாய் தந்தையர் மனமகிழ அவர்களுடைய இஷ்டப்படி நடப்பவனே சற்புத்திரனாகிறான். வீண் உபவாசாதிகளாலும் அசுவமேதாதி

யாகங்களாலும் உண்டாகும் ஸுக்ருதம் மாதா பிதாக்களுக்குப் பணிந்து பக்தியுடன் நடப்பதினாலேயே உண்டாகின்றது.

ஸ்திரீகளுக்கு கணவனே எல்லாத் தெய்வமுமாகையால் அவர்கள் ஸகல உபசாரங்களையும் அவருக்கே செய்யவேண்டும். ஸ்திரீகள் உபவாச முதலியன கடினமான நியமங்களொன்றும் செய்யாமலிருந்தும் பதிவிரதா தருமத்தினால் நற்கதி யடைகிறார்கள். ஆகையால் புருஷன் தாய்தந்தையர்களுக்கும், ஸ்திரீகள் பர்த்தாவுக்கும் உபசாரம் செய்யவேண்டுமென்பதே நமது சாஸ்திரங்களின் கருத்தாகின்றது. அவர்களுள் பதிவிரதைகளின் சரித்திரங்களும் மகிமைகளும் வெகு ஆச்சரியமும் ஆநந்தமும் விளைவிப்பதுமன்றிக் கேட்போருக்கு நற்புத்தி விளைவிப்பன வாயுமிருக்கின்றன. பதிவிரதை யென்னும் சொல், பதி-விரத என்னும் இரண்டு பகாப்பதங்களடங்கிய வார்த்தை. பதி என்றால் கணவன். விரதம் என்றால் தவம். ஆகவே கணவனை யுபசரிப்பதே யெல்லாத் தவமுமாக உடையவளென்பது பொருள். இத்தகைய பதிவிரதைகளின் சரித்திரங்கள் பலவாயிருக்கின்றன. அவைகளில் ஒன்றைச் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன்.

"கொக்கென்று நினைத்தையோ கொங்கணவா?"

பூர்வம் கௌசிக னென்னும் ஒரு பிராமணன் தவஞ் செய்துகொண்டிருந்தான். அவன் ஒருநாள் ஓர் மரத்தடியில் உட்கார்ந்து தவஞ்செய்துகொண்டிருக்கையில், அம்மரத்தின்மேலே ஓர் கொக்குவந்து உட்கார்ந்து எச்சமிட அது அவ்வேதியன் மேல் விழுந்தது, அதுகண்டு அந்தணன் கடுஞ்சினங்கொண்டு அதை விழித்துப்பார்த்தான்; உடனே அது நீறாய்ப்போய் பூமியில் விழுந்து மடிந்தது. அதைப்பார்த்துப் பூசுரன் கருணைகூர்ந்து, ஐயோ பாவம்! இவ்வேழைப் பிராணியை அநியாயமாக நீறாக்கிவிட்டேனே யென்று பச்சாத்தாபப்பட்டதோடு தன் தவத்திற்கு வல்லமையுண்டாயிற்றென்று உணர்ந்தான். அவன், பிறகு பிக்ஷைக்காக வழக்கப்படி ஓர் ஊருக்குச் சென்றான். அந்த ஊரில் ஓரகத்தில் நுழைந்து "பவதி பிக்ஷாம்தேஹி" என்று கேட்க அவ்வீட்டிலிருந்த ஸ்திரீ இதோவருகிறேன் இருங்கள் என்று சொல்லி அந்தப் பிராமணனை அங்கேயே நிற்கவைத்து, அவனுக்குப் பிக்ஷை சாதிப்பதற்காகப் பாத்திரத்தைச் சுத்திசெய்யப்போனாள். அதற்குள் அவ்வுத்தமியின் பர்த்தா மிகவும் பசித்து இளைத்துவருந்தி வீட்டுக்கு வந்துசேர்ந்தார். அதுகண்டு அவள் தான் செய்துகொண்டிருந்த வேலையைவிட்டு எழுந்து ஓடிக் கணவனுக்கு வேண்டிய உபசாரஞ்செய்யத் தொடங்கினாள். அவ்வுத்தமி மகாபதிவிரதை யாதலால் கொழுநனுக்கு இன்னமுதளித்து வெற்றிலை கொடுத்து விசிறிமுதலிய உபசாரஞ்செய்வதும், பிறகு அவன் உண்டு மிகுந்ததைத் தான் புசிப்பதும், பர்த்தாவையே சகல தேவதையுமாக நினைத்துப் பதிபத்தி செய்வதும், மனம்-வாக்கு-காயம் என்னும் மூன்று காரணங்களாலும் அவருக்கு ஹிதமே செய்வதும், எவ்வகையாலும் அவருக்கு விரோதமாக நடவாதிருப்பதும், பர்த்தாவின் உவப்புக்காகவே தன் மாமன் மாமியார் அதிதிகள் தேவதைகளை பூஜிப்பதும் ஆகிய இவற்றையே தன்கடமைத் தொழிலாய்க்கருதி நடப்பவள். அதன்படியே யன்று மவள் பதிக்குப் பணிவிடை செய்யப் புகுந்தாள். செய்துகொண்டே யிருக்கையில் தான் வாயிலில் நிற்கவைத்து விட்டுவந்த பிராமணன் நினைவுவந்தது. உடனே, ஓகோ, அபசாரமாயிற்றே! வாயிலில் அதிதியைக் காக்கவைத்து விட்டேனே யென்று தக்ஷணமே அவனுக்குப் பிக்ஷை யெடுத்துக்கொண்டு வெளியே வந்தாள். அவ்வந்தணன் கடுஞ்சினங்கொண்டு, அவ்வுத்தமியை சிவந்தகண்களால் உற்று நோக்கினான். அவ்வுத்தமி அவன் கோபத்தையறிந்து, ஓகோ பிராமண

உமக்குக் கோபம் வந்துவிட்டதுபோ லிருக்கிறதே!" 'கொக்கென்று நினைத் தனையோ கொங்கணவா?' என்றாள்.

அதைக்கேட்ட பிராமணன் வெட்கமும் வியப்பும் அடைந்து ஆகா தன் புருடனையே தெய்வமாய்க் கருதி நடக்கும் பதிவிரதைகளின் மகிமையே மகிமை! அவர்கள் வேறு தவம் யாகம் எக்கியம் ஒன்றும் செய்யாமலே தவத்தாலாய பயன் யாவும் அடைகிறார்கள். இம்மாது தன் பதிவிரதா வல்லபத்தால் நாம் அடவியில் கொக்கை யெரித்ததையும் அறிந்துகொண்டனளே என்று நல்லறிவு அடைந்தவனாய்ச் சென்றான்.

---

## கற்பின் பெருமை

### நளாயினி

பிரதிஷ்டானம் என்னும் நகரத்திலே கௌசிகன் என்னும் ஒரு பிராமணன் இருந்தான். அவன் முற்பிறப்பிலேசெய்த கொடிய தீவினைப்பயனாலே குஷ்டம் என்னும் பெருநோ யடைந்து மிகவும் வருந்தினான். அவன் மனைவி நளாயினி அவனை அந்நோய் காரணமாக அலக்ஷியஞ்செய்யாமல் அவனிடம்தெய்வவிசுவாசம்வைத்து, கால்கழுவல், கால்பிடித்தல், உடம்புபிடித்தல், எண்ணெய்தேய்த்துக் குளிப்பாட்டல், ஆடையுடுத்தல், வேளைதப்பாமல் வாய்க்கினிய பதார்த்தங்களோடு உண்டியுதவல், கபம், உதிரம், சீழ், மலஜலம் முதலியவற்றின் பெருக்கினைச் சிறிதும் அருவருப்பின்றி அவ்வப்போது கழுவித்துடைத்தல் முதலிய உபசாரங்களை அன்போடு செய்துவந்தாள். அவன்குறிப்பறிந்து பணிபுரிவதும் முகமலர்ச்சியுடன் சம்பாஷிப்பதும் அவன் சினந்தபோதும் பொறுத்துக்கொண்டு வேண்டுவனபுரிவது முதலிய கற்பிலக்கணஞ் சிறிதுந் தவறாமல் நடந்துவந்தாள். அவன் நோயினால் அடிக்கடி வருந்துகிறவனாகையால் மனைவியைக் காரணமின்றித் திட்டுவான். அவ்வனிதை அதனைச்சிறிதும் மனதிற்கொள்ளாமல் அவனைத் தெய்வமாக எண்ணிப் பூசித்துவந்தாள்.

இப்படியிருக்கும்பொழுது ஒருநாள் அவ்வந்தணன் மனைவியைநோக்கி, "இன்று ராஜமார்க்கத்திலே ஒரு கணிகை மாதைக்கண்டேன். அவள்பால் கொண்ட காதல் என்னை வருத்துகின்றது. இப்போது அஸ்தமிக்கும் வேளையாயிற்று, என்னை அவளிடம் அழைத்துக்கொண்டுபோய் விடுவாயாக. அவள் என்மனதைவிட்டகலவில்லை. அவளிடம் எனனைக்கொண்டுபோய் விட்டு அவள் என்னைச்சேர வழிதேடாவிடின் என் உயிர் தரியாது. நீ புத்திசாலி; தர்ம மறிந்தவள், உனக்கு நான் சொல்லவேண்டியதில்லை"—என்று கூறினான்.

இப்படி கூறக்கேட்டதும் நளாயினி, சற்று யோசித்து, கணவனுடைய விருப்பத்தை நிறைவேற்றவேண்டியது கற்புடையமாதர் கடமையாகுமாதலால், நமது கடமையைச்செலுத்துவோம் என்றெண்ணி, நாதா! அப்படியேசெய்வேன்; தமது விருப்பத்தை நிறைவேற்றுவதைத்தவிர வேறு அடியேன் செய்யத்தக்கது யாதுளது? ' என்று கூறி, வேசிக்குக் கொடுப்பதற்குப் பணமும் தன்சேலைகளிலே விலையுயர்ந்ததான சேலையிலொன்றும் எடுத்துக்கொண்டு தன்கணவனைத் தூக்கித் தோளிலே வைத்துக்கொண்டு புறப்பட்டாள்.

இவள் புறப்படும்பொழுது நல்ல இரவு; வீட்டைவிட்டுத் தைரியமாய் சிறிதும் அச்சமின்றித் தன்கற்பையே தனக்குத் துணையாகக்கொண்டுநடந்

தாள். சிறிது தூரம் போனதும் குற்றவாளிகளைக்கழுவிலேற்றப்படும் கொலைக் களத்தைக்கடந்து செல்லநேர்ந்தது. அந்தக்கொலைக்களத்தில் மாண்டவிய ரென்னும் முனிவர் அநியாயமான குற்றத்தினால் கழுவிலேற்றப்பட்டு வருந் திக்கொண்டிருந்தார். அவ்வழியே நளாயினி செல்லுகையில் கௌசிகனுடைய சிரம் அந்த மாண்டவ்யமுனிவரின் காலில் பட்டது. அதனால் அவர் அசை வுற்று மெத்தவருந்திச் சினங்கொண்டு, "அனியாயமாக ஆபத்தில் சிக்கி வருந் தும் எனக்கு, மிகுந்த துன்பமுண்டாகும்படி செய்தபாதகன் சூரியன் உதய மாகும்போது அழியக்கடவன்" என்றுகடுஞ்சாபந்தந்தனர். அந்தச்சாபங்கேட்ட நளாயினி திடுக்கிட்டு உடனே தைரியமாகநின்று, "அப்படியானால் சூரியன் உதயமாகாமற் போகக்கடவன்" என்று மறுசாபம் தந்து சென்றனள். பின் னர் மறுநாள் சூரியன் உதயமாகவில்லை. கற்புடைய மங்கையர் சாபம் வீணு குமா? அவர்கட்கு யாவரும் அஞ்சுவரன்றோ? ஸ்திரீகளுக்கு கற்பைவிடச் சிறந்ததுமுண்டோ? அதனாலன்றோ நாயனாரும், "பெண்ணிற் பெருந் தகையாவுள, கற்பென்னுந் திண்மை யுண்டாகப்பெறின்" என்று வற்புறுத்து வாராயினர். கற்பின்பெருமை அளவில் அடங்குமோ?—தொழுநோயால் வருந்தும் தன் கணவனிடம் பேரன்பூண்டு பணிபுரியும் இந்த உத்தமி வாய்ச்சொல் எதைத்தான் செய்யாது? சூரியன் தோன்றுமற்போகவே இருள் சூழ்ந்தது. பேரிருள் சூழவும் யாவரும் நடுங்கிக் காரணந் தெரியாமல் மயங்கினர். இப்படிப் பலபகல்கழிந்தன. வேதமோதல் முதல் நற்கருமங் கள் நிறைவேறப் பெறாமலொழிந்தன. யாவரும் இருட்டறையிலே சிறை பட்டதுபோலத் தவிக்கலாயினர்.

இரவிது பகலிது என்னும் பேதமில்லாமற் போனமையின் உலக முழுதும் தத்தளித்தது. எவரும் அதன்காரணந் தெரிந்துகொள்ளாத வராயினர். அதை நிவர்த்திக்கவும் மார்க்கம் அறிந்தாரில்லை. காலத்தைத் தெரிந்துகொண்டா லல்லவா உலகம் கருமங்களைமுடித்துத் தன் முயற்சி யாலே சித்திபெறும்? அஃதுணர்தற் கியலாமற்போயினமையின், ஒவ் வொன்றுந் தன் நிலைகுலைந்து நின்றது.

அந்தோ! சூரியனன்றோ உயிர்களைக் காப்பாற்றுகிறவன். அவன் இல்லையாயின் உலகமே யில்லாதொழியுமல்லவா? மழை யெப்படிப் பெய்யும்? பயிர் எப்படி விர்த்தியாகும்? இத்தகைய மகிமைவாய்ந்த சூரியனும் கற்பினால் மேம்பட்ட ஒருமாதின் சாபத்திலே கட்டுண்டானெனனில் கற்பின் மகத்துவம் கடலினும் பெரிதேயாமன்றோ?

இப்படி உலகம் நிலைகுலையவே, தேவர்களும் வேள்வியிலே கிடைக்கப் பெறும் அவிர்ப்பாகமில்லாமல், பெரிதும் யோசிப்பாராயினர். பின்னர் எல் லோரும் ஒன்றுகூடி பிரமதேவனிடம் சென்று முறையிட்டுக் காரணம் வினவினர். பிரமதேவர், "தேவர்காள்! இஃது கற்பினிற் சிறந்த உத்தமி யாகிய நளாயினியின் சாபத்தினால் விளைந்ததாகும். இதை விலக்குவது நம்மால் இயலாததாம். ஒன்று கூறுவேன் உங்கட்கு. நீங்கள் அவ்வாறு செய்வீராயின் நன்மையுண்டாம். தேவர்களே! அத்திரிமகாமுனிவரின் பத்தி னியும் கற்பிலே ஒரு சிறிதுந்தவறாத பாக்கியவதியுமாகிய அநசூயையினிடம் நீவிர் அனைவரும் சென்று பணிந்து குறைகூறிக் கொள்வீர்களாயின் அவ் வம்மை உங்கட்கு வழி பிறப்பிப்பள். இஃதே செய்யத்தக்கது இச்சமயம் என்று கூறி யனுப்பினர்.

தேவர்கள் அனைவரும், பிரமதேவர் கூறுவது நியாயமேயாம்; கற்புடைய மங்கையர் சாபத்தை யிவரே விலக்கவல்லவர்? கற்புக்கரசியாகிய அநசூயா

தேவியே இதற்கு நிவர்த்திதேடத் தக்கவள்—என்று கருதி அவளை வணங்கி விடைகொண்டு புறப்பட்டுப் பூலோகம்வந்து அநுசூயையிடம் போய் அடிபணிந்து குறைகூறிப் பிரார்த்தித்தனர்.

அநுசூயை கற்புடையவர்களது பெருமை கெடாததாதலின், தேவர்களே! நீவிர் அனைவரும் நளாயினி தேவியைத் தரிசித்து நன்குபசரியுங்கள். நான் இக்கணமே அவ்வம்மையிடம்போய் சூரியனுதித்து முன்போல் இரவு பகல் உண்டாகவும், அந்த உத்தமியின் நாயகனாகிய கௌசிகர் உயிர்பெற்றிருக்கவும் வழிதேடுகின்றேன்'' என்று கூறி யனுப்பிவிட்டு நளாயினியின் கிருகத்திற்கு எழுந்தருளினாள்.

---

## வியாதி மூலங்கள்.

(218-ம் பக்கத் தொடர்ச்சி.)

சாதாரணமாக, வெற்றுடம்பைக் காற்று முதலிய வற்றிற்கு வெளிப்படுத்துவதனால் (Exposure) வருந்தீங்குக ளின்னவை யென்று நமது வைத்தியர்களுள் அநேகருக்குத் தெரியாது. உப்புப் புளியில்லாக் கடும்பத்தியமாத்திரம் எந்த வியாதிக்கும் ஓரேமாதிரியாய் வைத்து விடத்தெரியும். வியாதிவரும் வழிகளையும், வந்த வியாதி யதிகப்படுவதற்கான முக்கிய காரணங்களையுங் கண்டறிந்து அவற்றிற்குத்தக்க முக்கிய ஏற்பாடுகள் செய்கிறதில்லை. வியாதி சொஸ்தப்படுவதற்கு மருந்தொன்றே போதாது. இடம், உணவு, உடை முதலியவற்றை வியாதியொழிவுக் கநுகுணமாகத் தெரிந்து வியாதியஸ்தனுக்கு அமைக்கவேண்டுவதோடு, குளிர்காற்று முதலியவற்றால் வருங் கெடுதிகளைத் தடைபண்ணுவதற்கான ஏற்பாடுகள் செய்யவேண்டுவதும் அத்தியாவசியகம். வியாதி வந்ததற்கு, அல்லது வந்த வியாதி யதிகரித்ததற்குக் காரணம்:—நேற்றென்ன, சுரைக்காயுண்டனையோ? எண்ணெயிட்டு தாளிதஞ் செய்து கொண்டனையே? கடுகு சேர்த்துக்கொண்டனையோ? வேண்டாமென்ற உப்பு, புளியைக், கறியிலெதையாவது கலந்துகொண்டனையோ? ஊறுகாய் தொட்டுக்கொண்டனையோ? என்று இப்படி அகாரணவஸ்துக்களை எல்லாங் காரணமாய்க் கேட்பது பெரும்பான்மையும் நமது வைத்தியர்களுக்கு வழக்கம். யோசிக்கு மிடத்து, அப்படிப்பட்ட வைத்தியரிடமிருந்துதான் நமது ஜனங்கள் சாதாரணமாய் வியாதிகளுக்கு மூலம் பூர்வஞ் சொன்னது போற்சொல்லக் கற்றுக் கொண்டார்களெனத் தோற்றுகின்றது. வெற்றுடம்பை குளிர்ந்து வீசும் காற்று முதலியவற்றிற்கு நெடுநேரம் வெளிப்படுத்துங் கொடிய வழக்கத்தை விடும்படி வைத்தியன் வியாதியஸ்தனுக்குக் கண்டிப்பான கட்டளையிடவேண்டும். இது, வைத்தியன்செய்யும் பத்தியயேற்பாட்டில் முதன்மைபெற்றதும் அதிமுக்கியமானதுமா யிருத்தல்வேண்டும். குளிர்காலங்களில் பெரியவர்கள் தங்கள் தேகத்தை மட்டும் மெல்லிய வஸ்திரத்தாலேனும் போர்வையிட்டுக்கொண்டு, தமது இளங்கைக் குழந்தைகளையுஞ் சிறுபிள்ளைகளையும் வெற்றுடம் போடிருக்கவிடுங்

குரூரத்தைப் பலவிடங்களில் நாம் காண்கிறோம். இவ்வறியாமைக்கு மன்னிப்பில்லை! இந்த மூடவழக்கமானது பாலர்களுக்கு அள்ளுமாந்தம், இருமல், சுரம், சன்னியிழுப்பு, பேதி, தொண்டையிருண்டுகுரல் மாறி மூச்சுத்திணறிப் பலதடவைகளில் குழந்தைகளைக் கொல்லும் தொண்டை வியாதியாகிய, இங்கிலீஷில "குரூப்" என்று சொல்லப்படும் மரணவேதுவான வியாதி, ஆகிய மற்றும் பலவித நோய்களுக்கிடஞ்செய்கின்றது. அப்படிப்பட்ட நோய்கள் வரும்போதாவது சீதளத்தைத் தடுக்கத்தக்க ஏற்பாடுகளைத் தாய்தந்தையர் செய்கின்றனரா? இல்லை! இல்லை!! பின்னை யென்னசெய்கிறது சாதாரண ஜனங்களின் வழக்கம்? மருந்தாலானவெல்லாம் பார்த்துவிட்டுப் பின்பு, மந்திரத்தாலும் மாயத்தாலும் வியாதியைப்போக்கப் பார்ப்பார்கள்! "மந்திரத்தால் மாங்காய் விழா" என்னுஞ் சங்கதி யிவர்களறியார்கள்! அன்றியும், ஆசாரபரராயிருப்பவர்கள் குழந்தைகளுக்கு பருத்தி நூல் வஸ்திரத்தால் செய்த அங்கி முதலியகரித்தால் அடிக்கடி யெடுக்கப் பிடிக்க வுதவாதென்று கருதி, தமதிளங்குழந்தைகளை வெங்குளிரில் நடுநடுங்கி வாய்விட்டலறி வருந்தும்படி வெற்றுடம்போடு விட்டிருப்பதையும் பலவிடங்களிற் பார்க்கலாம். குளிருக் காற்றாது சிசுக்கள் அப்படி யலறியழும்போது சில மூடத்தாய்மார் பசியினாலழுகிறதென்று எண்ணி (உண்மைக் காரண மறியாமல்) கொஞ்ச நேரத்துக்குமுன் பால்கொடுத்தோமே யென்பதையும் கவனியாமல் மேலும் பாலூட்டி வயிற்றைக்கெடுத்துப் பலவியாதிகளுக்கிடந்தேடுவதும், வயிறிளக்க எண்ணெய் முதலியவை யூற்றுகிறதும் பலருக்குத் தெரியும். ஆசார பரராயிருப்போர், தங்களாசாரத்துக்குக் குறைவு வாராதபடி நார்மடித்துணியிலாவது, சுத்த கம்பளித்துணியிலாவது (பிளானெல்) சிறு அங்கி, பாவாடை முதலியதைத் தைத்துப்போட்டுக் குழந்தைகளுடம்பைப் பாதுகாப்பதிற் றாழ்வில்லையே. குளிரில்லாக் காலங்களிலும் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் அங்கியிட்டு வழக்கப்படுத்துவது நம் தேசாசாரத்துக்கு எவ்வளவு முதவாது. கெடுதியே பயக்கும். எதையும் விவேகத்தோடு ஆண்டு சுகிக்க வேண்டுமென்பது எம்மனோர் கருத்து.

---

## ஜீவோற்பத்தியும்—அதன் சிகிச்சையும்

(133-ம் பக்கத்தொடர்ச்சி)

சாதாரணமாய் விஷசுரமானது விஷவாயுவினாலும் விஷவஸ்துக்கள் சரீரத்தில் இரத்தத்தில் கலத்தலாலும் உண்டாவதால் விஷசுரம் உண்டானவுடன் சரீரத்திலுள்ள இரத்தங்களெல்லாம் விஷமாய்விடுகின்றது. இந்த விஷசுரமானது தினம்விட்டுதினமும் அல்லது இரண்டுநாளைக் கொருதரமும் தினந்தோறும் வருவதுண்டு. சிலசமயங்களில் விடாமல் 7-நாள் அல்லது 15-நாள் காய்ச்சலிருப்பதுண்டு. இதனால் விஷசுரமல்லவென்பதற்கு இடமில்லை. ஆனால் பெரும்பான்மையும் விஷசுரத்திற்கு சுரம் உண்டாவதற்குமுன் குளிரும் சுரம்விடும் காலத்தில் வியர்வை கொட்டல்

முதலிய குணங்கள் இருப்பதுண்டு. இச்சுரம்கண்டால் எப்பொழுதும் விட்டு விட்டு காய்ச்சலடிப்பதுவழக்கம். இந்த சுரமானது பெரும்பாலும் பித்தாச யப் பையையும் ஜீரணப்பையையும் அனுசரித்தே வருகின்றதால் நீடித்து காய்ச்சலிருக்குங்கால் பித்தப்பை வீங்கிவிடுவது வழக்கம். இதையே சுரக் கட்டி யென்பார்கள். மேல்நாட்டார்கள் (என்லார்ஜ்மென்ட் ஆப் ஸ்பிளீன் என்பார்கள்) சுரக்கட்டி அதிகபெரிதாகிவிடுமானால் அதுஜீரணப்பையையும் வீங்கச்செய்துவிடும். சீரணப்பை வீங்கிவிடுமானால் இருதயத்தைப் பலயீனப் படுத்திவிடும். அன்றியும் இரத்த விருத்தியும் குறைந்துவிடும். சரீரம் வெளுத்துவிடும். இதைப்பித்தசோகை என்று சொல்லுவார்கள். பித்தப் பையும் ஜீரணப்பையும் இரண்டும் வீங்கிவிடுமானால் இதனால் உண்டாகும் கெடுதிகள் பலவுள. மேல்நாட்டார் இதை (காலா அசார்) என்பார்கள். இந்த வியாதியை மேல்நாட்டார்கள் அசாத்தியமென்று சொல்வதுண்டு. இத் தகையவியாதிகளைக்கண்டு தெளிவாய் சிகிச்சைசெய்வதில் டாக்டர் மேஜர் டானவன் என்பவர் தேர்ந்தவரென சொல்லப்படுகின்றார். ஆனாலும் இவரும் இத்தகைய வியாதிக்கு தகுந்த சிகிச்சை செய்துவருகின்றார் என்பது நன்கு புலப்படவில்லை. பெரும்பாலும் இத்தகைய வியாதிகளுக்கு உஷ்ணப் பிர தேச சஞ்சாரம் குணம் தருவதாய் சிலரின் அபிப்பிராயம். இந்த வியாதிக்கு அமெரிக்காதேசத்தில் ஒரு பிரசித்திபெற்ற டாக்டர் பித்தப்பையை குறைக்க (கார்டஸ் மேரியானஸ்) என்றதையும் சீரணப்பையைக் குறைக்க (சியனோதஸ் அமெரிக்கனஸ்) என்னும் ஒளடதத்தையும் கண்டுபிடித்து விஸ்தாரமாய் எல்லாவைத்திய விளம்பரங்களிலும் பிரசுரித்திருக்கின்றனர். அதை அநேக ருக்கு உபயோகித்துப்பார்த்ததில் குணம்தருவதாய் தோன்றவில்லை. ஜெர் மென் தேசத்து டாக்டர் ஹூவிஸ்கூனி என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட சிகிச்சாமுறையில் சொல்லியபடி தொட்டி ஸ்நாநங்களாலும் ஒருகுணமும் காணப்படவில்லை. கடைசியாய் இந்த வியாதியால் நாளதுவரையில் கஷ்டப் படும் ஜீவர்களுக்கு ஒருவிதமான சிகிச்சையும் உலகில் காண்கிலோம். அநேகர் ஏதோ ஒருவர்க்கு காகதாலி நியாயம்போல குணமாகிவிடுமானால் நான் குணம் செய்தேன் என்று சொல்லிக்கொண்டாலும் வியாதிக்குத் தக்கமருந்து ஒருவரும் கண்டுபிடிக்கவில்லை என்றே சொல்லலாம். இந்தவியாதி முதிரும் சமயம் இருதயம் பலயீனப்பட்டு இலேசாக கால்வீக்கம் காண்பதுண்டு. இது கண்ட சிலநாளில் பிரதிகூலமாய் விடுவதுண்டு. இத்தகைய கஷ்டங்கள் உண்டான பிறகு வைத்தியரை தேடித்திரியும் ஜீவர்களுக்கு தெரிவித்துக் கொள்வதாவது இத்தகைய கொடியவியாதிக்குக் காரணம் விஷசுரமே. அத் தகைய விஷசுரம் உண்டானதும் மீண்டும் மீண்டும் சுரம் உண்டாகாவாறு சிகிச்சை செய்துக்கொள்ளவேண்டும். தற்காலத்தில் பெரும்பாலார் விஷ சுரங்களுக்கு கொய்னாவென்னும் ஒளடதத்தையே உபயோகித்து வருகின்றார் கள். இதனால் சுரத்தைக் கூடியசீக்கிரம் குணம்செய்யும் தன்மைவாய்ந் திருந்தாலும் வியாதியஸ்தர்கள் மருந்தை நீடிதது உபயோகிக்காமல் சுரம் கொஞ்சம்விட்டதும் விடாததுமா யிருக்கும்போதே, மருந்தை நிறுத்திவிடு கின்றார்கள். டாக்டர்களும் ஒருபுட்டி கொய்னா மிக்சர்கொடுத்துவிட்டு சுரம் போய்விட்டது, இனி மருந்துவேண்டாம் ஸ்நாநம் செய்துவிட்டு ஏதாகிலும் பலத்துக்கு ஒளடதம் சாப்பிடுங்கள் என்று சொல்லிவிடுகின்றார்கள். சாதா ரணமாய் விஷசுரம் வந்த புருடர்கள் சுரம் நின்றகாலத்தும் சிலநாளைக்கு கொய்னாவை குறைந்த அளவில் உட்கொண்டு வரல்வேண்டும். சிலர் கொய்னா அதிகபித்தம், உபயோகித்தலாகாது என்னும் தப்பபிப்ராயத்தைக் கொண்டி ருப்பதற்குக்காரணம் சிற்சில டாக்டர்கள் 15-(கிரெயின்)20-(கிரெயின்)கொய்

னாவை நாள் ஒன்றுக்கு 3 தரம் அல்லது 4 தரம் கொடுத்துவருகின்றார்கள். இந்த அளவு மிகையான படியால் பித்தம் செய்கின்றது. இதைக்கொண்டே பாமரர்களும் கொய்னாவை த்வேஷமாய் நினைக்கின்றார்கள். சாதாரணமாய் கொய்னாவை வேளைக்கு 2-(கிரெயின்) விகிதம் நாள் ஒன்றுக்கு 3 தரம் உட்கொண்டுவந்தால் யாதொரு கெடுதலும் செய்யாமல் சரீரத்துக்கு பலம் தரும் ஔடதமாயு மிருப்பதன்றி சுரங்களையும் போக்கும். இன்னும் தற்காலத்தில் உட்கொள்ளும் கொய்னாவால் பித்தம்செய்வதாய் நினைத்து இரத்தத்தில் குத்தி யேத்தும்முறையாய் உபயோகப்படுத்துகின்றார்கள். இதுவும் சில சமயங்களில் கெடுதல்செய்கின்றது. மேல்சொன்ன 2 கிரெயின் கொடுப்பதும் மிகையென்று ஜெர்மன்தேசத்து (ஓமயோபாதிக்) சிகிச்சையில் பழகுபவர் சொல்வார்கள். அவர்கள் 1/16 கிரேயின் கொய்னாவுடன் 1/64 கிரெயின் பாஷாணம் சேர்த்து உபயோகித்தால் அதிக குணம் தருவதாயும், விஷசுரத்தை வேருடன் களைகின்றதாயும் சொல்லுகின்றார்கள். பெரும்பாலும் சகலரும் கொய்னாவென்னும் ஔடதங்களே உபயோகிக்கின்றார்களே, இதைத் தவிர வேறு சிகிச்சைகள் கிடையாவாவென்று அநேகர் சந்தேகிககலாம். அநேகவிதமாயும் அநேகர் சிகிச்சைசெய்வதையும் விஸ்தாரமாய் தெரிந்தவளவில் எழுத துணிந்தேனாயினும் இதைக்கண்ணுறும் நண்பர்கள் நிதானமாய்க் கவனிக்கும்படிக்கும் அவரவர்கள் அனுபவத்தில் கண்டுள்ள மேற்படி வியாதியின் சிகிச்சாமுறைகளையும் பரோபகாரமாய் வெளியிடுவார் என்று நம்புகிறேன்.

---

## கற்கோட்டை—நாவல்

(239-ம் பக்கத் தொடர்ச்சி.)

### 4-வது அத்தியாயம்

ஒருநாள் இரவு கமலாம்பாள் போஜனம் முடிந்தபின் வழக்கம்போல் மேல் மாடியிலுள்ள தன் சயன அறைக்குச் சென்றாள். ஆனால் உடனே நித்திரை வாராததால் அறையின் எதிரிலுள்ள தாழ்வாரத்தில் உட்கார்ந்து நிலவின் பிரகாசத்தையும் உல்லாசமான காற்றையும் அனுபவித்துக் கொண்டிருந்தாள். அவள் அறையின் புறமாய் கற்கோட்டையின் பக்கத்தில் ஒரு ஏரியிருக்கிறது. நிர்ச்சந்தடியான விடத்தில் அரைச்சந்திரன் பிரகாசம் ஜலத்தில் பிரதிபலிப்பதைப் பார்த்துக்கொண்டே யிருக்கையில் அவள் மனம் மெல்ல மெல்ல வெளிக்காட்சியில் நாட்டம் விட்டு அந்தர்முகம் திரும்பி சிந்திக்கத் தொடங்கியது. எழுவருடங்களுக்கு முன் நடந்த காட்சி அவள் மனக்கண்ணுக்குத் தோன்றவும் அவள் வாய் மெதுவாய், "ஆ, கண்ணன் நம்மை மறந்து விட்டிருப்பானோ?" என்று கூறியது.

அச்சமயம் அறையிலுள்ள மெழுகுவத்தி தீபம் முழுதும் எரிந்து விட்டதால் தானே அணையும சமயமாயிருபபதைக்கண்டு அருகிலிருந்த மற்றொரு வத்தியைக் கொளுத்தத் துரிதமா யெழுந்தோடினாள். ஆனால் அதற்குள் அது அணைந்துபோய் அறையில் இருள மூடிக்கொண்டது. கமலாம்பாள், சரி, சயனித்துக் கொள்வோமென வெண்ணி மேலுடையைக் களையவாரம்பித்தாள். அச்சமயம் திடீரென்று குதிரைகள் படபடவென்று வரும் சத்தம் கேட்டது. அவை இராஜபாட்டையிலிருநது கற்கோட்டையை நோக்கி வருவதுபோல் தோன்றியது. உடனே சில குதிரைகள் தட்டென்று நின்று திரும்பியதுபோல் சத்தம்கேட்டது. அடுத்த நிமிடம் இரண்டு கட்சிகள் ஒருவருக்கொருவர் பயமுறுத்திக்கொண்டும் தூஷித்துக்கொண்டும் யுத்தம்

புரிவதைப்போல் கத்திகளோடு கத்திதாக்கும் சத்தமும், கைத்துப்பாக்கிகள் சுடப்படும் வெடிச்சத்தங்களும் அவள் செவிகளில்கேட்டது. கன்னிகை திடுக்கிட்டுப் பீதியடைந்து மாடியின் கிராதி யோரத்திற்சென்று எட்டிப் பார்த்தாள். சண்டையிடும் ஆட்கள் யாரும் கண்களுக்குப் புலப்படவில்லை. இடையிலுள்ள விருக்ஷங்கள் மறைத்துக் கொண்டன. சண்டை நெடுநேரம் நடக்கவில்லை. இரண்டொரு நிமிடங்களுக்குள் நாலைந்து குதிரைகள் ஓடுவது போலும் வேறு குதிரைகள் அவற்றைத்துரத்திச் செல்வது போலும் சத்தம் கேட்டது. சற்று நேரத்திற்குள் அச்சத்தம் கற்கோட்டைக்குத் தூரமாய்ச் சென்றுவிடக் கடைசியில் முன்போல் எங்கும் நிர்ச்சந்தடியாய்விட்டது. கமலாம்பாள் உடனே அறைக்குட்சென்று கதவைத் தாளிட்டுவிட்டு சயனித்துக் கொண்டாள். மறுநிமிடம் தங்கம்மாளும் அரியநாயகியும் அவள் அறையருகில்வந்து கதவைத்தட்டி விசாரித்தார்கள். கமலாம்பாள் கதவைத்திறவாமலே, "நான் பயப்படவில்லை. படுத்துக்கொண்டேன்" என்று கூறிவிடவே அவர்கள் திரும்பிச் சென்றார்கள்.

கமலாம்பாள் மறுபடி எழுந்து தன் அறையிலுள்ள சாளரத்தை மெது வாய்த்திறந்து பார்த்தாள். அந்தப் பக்கத்தில்தான் வீட்டின் தெருவாசற்படியிருக்கிறது. அதாவது சாளரம் வீதியை நோக்கிக்கொண்டிருக்கிறது. சற்றுநேரம் தெருப்பக்கம் பார்த்துவிட்டு சாளரத்தின் திரையை விடப்போகும் சமயத்தில் தெருக்கதவு திறக்கப்படும் சத்தத்தைக்கேட்டு எட்டிப்பார்த்தாள். தன் தந்தை இரண்டு வேலைக்காரரோடு வெளியிற் செல்வதைக் கண்டாள். அவர்கள் வாசற்படிக்கெதிரில், நேராய்ச் சாளரத்தின் கீழ் நின்றார்கள். ஸர்தார், "இதென்ன சம்பவமாயிருக்கும், யாராவது வழிப்போக்கர் கள்ளரிடம் சிக்கிக்கொண்டார்களோ" என்று வேலையாட்களை நோக்கிக்கூறினார். வேலைக்காரரில் ஒருவன் "ஒருசமயம் இராணியின் துருப்புகள் கலகக்காரர் அல்லது பழைய மதஸ்தரைத் துரத்திச் செல்வதாயிருக்கலாகாதோ, என் எஜமானே" என்றான்.

ஸர்தார் அப்படியு மிருக்கலாம், எதற்கும் போய்பார்ப்போம், யாராவது, பாபம், காயம்பட்டு விழுந்து கிடப்பதாயிருந்தால்..." என்று கூறியவளாயில் தான் அச்சம்பாஷணைக் கமலாம்பாள் செவிகளில் விழுந்தது. ஏனெனில் அவ்வாறு அவர் கூறிக்கொண்டே முன்செல்ல மற்ற வேலைக்காரர் இருவரும் அவர்கூடச் சென்றார்கள். கமலாம்பாள் இவர்கள் திரும்பி வருவதையும் பார்ப்போமென்று சாளரத்தில் நின்றுகொண்டே யிருந்தாள்.

இரண்டு மூன்று நிமிடங்கள் வரையில் ஒரு சந்தடியுமில்லை. அதன் பிறகு சற்று தூரத்தில், "ஹாஹா, அடடா" என்று யாரோ கூவும்சத்தம் அவள் செவியில் விழுந்தது. ஆவலோடு அவர்கள் சென்ற திக்கைப்பார்த்துக் கொண்டே யிருந்தாள். சற்று நேரத்திற்குள் வீட்டெதிரில் சற்று தூரத்திலிருந்த மரங்களி னிடையிலிருந்து அவள் தந்தையும் ஆட்களும் வெளிப்படுவதைக் கண்டாள். ஆனால் இப்போது அவர்கள் தங்களுக் கிடையில் நான்காவதாக ஒரு மனிதனைத் தழுவிப் பிடித்துக்கொண்டு வருவதைக் கண்டாள். அவர்கள் ஒருவார்த்தைகூட வாய் பேசாமல் வந்தார்கள். வீட்டருகில் வரும் போது தன் தந்தை தலை யண்ணாந்து மாடிமேல் பார்ப்பதையறிந்து சட்டென்று தன் தலையை யுள்ளே யிழுத்துக் கொண்டாள். ஆகையால் அவர்கள் அழைத்துவந்த மனிதன் யாரென்று அவள் அறியக் கூடவில்லை. அவர்கள் உடனே வீட்டிற்குள் நுழைந்ததும் கதவு மூடித் தாளிடப்பட்டது. கமலாம்பாள், பாபம் யாரோ காயம்பட்டவனைக் காப்பாற்ற அழைத்து வந்திருக்கி

ளூர்கள் என்று தனக்குத்தானே கூறிக்கொண்டு மஞ்சத்தில் படுத்துக் கொண்டு "அவனுக்கு அதிகமாய் காயம்படவில்லை போல் காண்கிறது. எல்லா சங்கதியும் பொழுது விடிந்தால் விபரமாய்த் தெரிந்துவிடும்" என்று சிந்தித்துக்கொண்டே நித்திரைபோய் விட்டான்.

மறுநாட் காலை தனக்குத் தலைசீவி யாடை யுடுத்தவந்த இரண்டு தாதிகளும் தங்கள் வேலையைச் செய்துக்கொண்டே இரவு நேரிட்ட சம்பவத்தைப் பற்றி பேசினூர்கள். ஒருத்தி கள்ளரால் நேரிட்ட குழப்பமாகவே யிருக்கும் என்றாள். மற்றவள், "இல்லையில்லை. யாரோ பழைய மதக்கூட்டத்தாரை இராணியின் துருப்புகள் கண்டுபிடித்துத் துறத்திக்கொண்டு வந்தார்கள். இதுவே யுண்மை" என்றாள். ஆனால் ஒருத்தியாவது இரவு காயம்பட்ட ஒருவன் வீட்டிற்குள் கொண்டுவரப்பட்டான் என்பதைப்பற்றி ஒரு வார்த்தை யாவது கூறவில்லை. கமலாம்பாள் முன்யோசனை யுடையவளானபடியால் ஒருசமயம் தன் தந்தை அச்சங்கதியை இரகசியமாய் வைத்திருக்கலாகுமென் றெண்ணி தான் அதைப்பற்றி யொன்றும் கேளாமலேயிருந்தாள். ஏனெனில் அச்சமயம் பழயமதக் கொள்கைகளை யனுசரிப்பவர்களையும் அவர்களுக்கு எந்த வுதவியாவது செய்கிறவர்களையும் அதற்கென் றேற்படுத்தப்பட்டிருக் கும் விசாரணைச் சபையார் சற்றும் இதக்கமின்றி கடுமையாய்த் தண்டித்துக் கொண்டிருந்தார்கள்.

கமலாம்பாள் போஜன கூடத்திற்குள் சென்றபோது தன் தந்தையும், அத்தையும், அரிய நாயகியும் அங்கு முன்னடியே வந்துட்கார்ந் திருப்பதைக் கண்டாள். தான் உள்ளே நுழையும்போது அவர்கள் ஏதோ குசுகுசுவென்று சம்பாஷித்துக்கொண்டிருந்ததாய் அவளுக்குப்புலப்பட்டது. ஆயினும் உண்மையென்று ஸ்திரமாய் நினைக்கக்கூடவில்லை. ஆகையால் அவள் அதைக்கருத்தில் வைக்காமல் எப்போதும்போல் அவர்களிடம் சந்தோஷமாய்ப் பேசிக் கொண்டிருந்தாள்.

ஸர்தார் செல்வராயர் தன் புதல்வியை நோக்கி, "இரவு நீ பயப்படாமல் சயனித்துக் கொண்டாயென்று இவர்களிருவரும் கூறினூர்கள். இன்றேல், நானே யுன்னிடம் வந்திருப்பேன்" என்றார்.

**கமலாம்பாள்.**—"ஏனப்பா அவர்கள் யார்? நீங்களேன் வெளியில் சென் றீர்கள்?"

**தந்தை.**—யாராவது சந்தேகப் பேர்வழிகள் சமீபத்தில் பதுங்கியிருக்கிறார் களா வென்று பார்க்கப்போனேன். அவர்கள் இராணியின் துருப்பு களே. அதிற்றடையில்லை. ஏனெனில் அவர்கள் சந்தைத்திரும்பிச் செல் லும்போது அவர்கள் உடுப்பால் நன்றாய்த் தெரிந்துவிட்டது. பழைய மதஸ்தரைத் துரத்திச் செல்கிறார்கள்.

**கமலாம்பாள்.**—ஆம், நான் கூட அவர்கள் கடைசியில் திரும்பிச் சென்ற போது கொஞ்சம் பார்த்தேன். முன்னே ஓடுகிறவர்கள் அந்தஸ்துள்ள வர்களே யென்று தெரிகிறது. அவர்கள் தலையணிகளில் இறகுகள் இருந்தன. வேறொரு விபரமும் தெரியவில்லையோ?

**தந்தை.**—"அந்தஸ்துடையவர்களோ என்னமோ எனக்குத் தெரியவில்லை. வேறொரு தகவலும் புலப்படவில்லை. அவர்கள் அகப்பட்டுக் கொண் டால் எப்படியும் எல்லா விவரமும் நாளைக்கு வெளிவந்து விடும் அகப் படாமல் தப்பித்துக்கொண்டு போய்விட்டால் ஒன்றுமே வெளிவராது. ஏனெனில் துரைத்தனத்தார் தங்கள் காரியத்தில் பங்கமடைந்ததை வெளியிடப் பிரியப்படமாட்டார்கள். இவ்வளவே யதன்முடிவு. காலை

யிலும் ஏதாவது அறிகுறியானவை அகப்படுகிறதா பார்ப்போமென்று போய்ப்பார்த்தேன். குதிரைகளின் காலடிகள் தவிர வேறொன்றும் அகப்படவில்லை. இனிப் போஜனம் செய்வோம். குளிர்ந்த காற்றில் உலாவவேபசியதிகமாயிருக்கிறது" என்றார்.

இவ்வாறு தன் தந்தை தனக்கு நடந்த சங்கதியை யடியோடு மறைத்து விடவே கமலாம்பாளுக்குப் பெரிய சந்தேகமும், வியப்பும், இதையறிய வேண்டுமென்ற ஆவலும் அதிகமாய்விட்டது. அதோடு ஏன் நமக்கு மறைக்க வேண்டும், அப்படி நமது தந்தை சீவகாருண்யத்தைக் கருதி பழைய மதஸ்தனுக்கு உதவி புரிந்திருந்தாலும் நாம் அவரைக் காட்டிக்கொடுப்போமென்று அவர் சந்தேகிக்கலாகுமோ, நாம் என்ன அப்படி புத்தியறியாச் சிறுபிள்ளையா என்று துயரமும் கோபமும் கூட உண்டாயின. இவையேயன்றி, "இரவு அழைத்துக்கொண்டு வரப்பட்டவன் யாவனாயிருக்கும்? ஏன் அவனைப்பற்றி யிவ்வளவு இரகசியம்? அவன் இன்னும் வீட்டிலேயே யிருக்கிறானோ போய் விட்டானோ?" என்று பலவித கலவரங்களுண்டாயின. இதைப்பற்றி யொருவரையும் கேட்கவும் இடமில்லை. தன் தந்தை யிவ்வாறு மறைத்து விட்டவே தான் வரும்போது அவர்கள் மூவரும் குசுகுசுவென்று பேசியதாய்த் தான் கருதிய சந்தேகம் உண்மையாகவே இருக்குமென்றும் மூவரும் சேர்ந்தே தனக்குச் சங்கதியை மறைத்து வைத்திருக்கிறார்களென்றும் அவள் மனதிற் பட்டது. ஆகையால் தன் தந்தையும் வேலைக்காரரும் ஒரு காயம்பட்ட மனிதனை யழைத்து வரும்போது தான் கண்ட சங்கதியை அவள் ஒருவரிடமும் கூறவில்லை.

அன்று காலைப் போஜனம் முடிந்ததே வர்த்தகர் வழக்கம்போல் நகரத்திற்குச் சென்று மாலை நாழிகை கழிந்தபே வந்தார். இதற்கிடையில் கமலாம்பாள் வழக்கம்போல் வாசிப்பதிலும், விளையாட்டிலும் பெரும்பாலும் தன் உபாத்தினியும் நேசியுமாகிய அரியநாயகியோடு காலத்தைக் கழித்தாள். இரகசியம் என்னமோ கடுகளவும் வெளியாகவில்லை.

அன்றிரவு அவள் நெடுநேரம் நித்திரை பிடிக்காமல் முன் இரவு சத்தம் நேர்ந்த ஸ்தலத்தையும் தன் தந்தை புதுமனிதனை யழைத்து வந்த வழியையும் பார்த்துக்கொண்டே யிருந்தாள். எவ்வளவு தான் சிந்தித்தாலும் நான்காவது ஒரு மனிதன் அவர்களோடு வந்தான் என்று மட்டும் தெரிகிறதன்றி அவன் கறுப்பா, சிகப்பா, வாலிபனா, கிழவனா ஒரு விபரமும் புலப்படவில்லை. பிறகு நித்திரைக்குச் சென்றபோது அன்னித்திரை கலவரமான கனவுகள் நிறைந்ததாகவே யிருந்தது.

மறுநாள் பகலும் அவள் தந்தை நகரத்திற்குச் சென்று இரவு நெடுநேரம் கழித்து வந்தார். கமலாம்பாள் அன்றிரவும் நெடுநேரம் தாழ்வாரத்திலுட்கார்ந்து பிறகே மஞ்சத்தில் சென்று சயனித்தாள். நித்திரை பிடிக்கவில்லை. மனமோ கலவரமாகவே யிருந்தது. அதோடு ஏதோ அசாதாரண சம்பவம் நேரிடும்போல் மனதிலொரு உணர்ச்சியும் பீதியும் உண்டாயிற்று. அதனால் தீபத்தை யணைக்காமலே விட்டிருந்தாள். கலவரச் சிந்தையால் அந்தமெழுகுவத்தி யணையுமுன்பே வேறொன்று கொளுத்திக்கொள்ள வேண்டுமென்பதைக் கவனியாதிருந்தாள். கடைசியில் தீபம் அணைந்துவிடவே திடுக்கிட்டெழுந்தாள். இருட்டில் தனியாயிருக்க அந்த இரவு பயமாயிருந்தது. முதலில் அரியநாயகியி னறைக்குச் சென்று அவள் கூட சயனித்துக்கொள்வதென்று நினைத்தாள். ஆனால் தான் பயங்காளியென்று காட்டிக்கொள்ளப் பிரியமில்லை. ஆகையால், கீழே கூடத்தில் ஒரு தீபம் இரவு முழுதும் எரி

கிறதாகையால் அங்கு சென்று இன்னொரு வத்தி ஏத்திக்கொண்டு வர வேண்டுமென்று தீர்மானித்துப் புறப்பட்டாள். நேரே செல்லும் மரப் படிக் கட்டுகளின் வழியே சென்றால் அவ்வழியில் தன் அத்தையாகிய தங்கம்மாள் ஒரு அறையில் சயனித்துக்கொண்டிருக்கிறாள், படிகளிலுண்டாகும் கிருக் கிடும் சத்தத்தால் அவள் விழித்துக்கொள்வா ளென்றஞ்சி வேறு படிகளின் வழியாய்ச் சென்றாள். அவ்வழி சென்றால் இரண்டொரு கூடங்களையும் வீட்டின் பின்பக்கமிருக்கும் ஒரு நீண்ட இருண்ட சந்துபோன்ற விடத்தை யும் கடந்து பிறகு தான் கோரிய விடத்தைச் சேரவேண்டும்.

அவள் புறப்பட்டு கூடங்களைத் தாண்டி சந்தில் நுழைந்தாள். அதன் இருபக்கச் சுவர்களிலும் பூ வேலைகளால் சித்திரிக்கப்பட்ட பலகைகள் தைக் கப்பட்டிருக்கின்றன. அங்கு அதிக இருட்டாயிருந்ததால் இரண்டு பக்கங் களிலும் தடவிக்கொண்டே மெதுவாய்ச் சென்றாள். அச்சமயம் மெதுவாய் யாரோ நடந்துவரும் சத்தங் கேட்டதே நடுக்கங்கொண்டு நின்றாள். மறு நிமிடம் தன் தந்தையின் நாய் அருகில்வந்து காலை நக்கிக்கொண்டும் வாலை யாட்டிக்கொண்டும் நிற்பதைக் கண்டாள். உடனே யவள் சற்று தைரிய மடைந்து முன் சென்றாள். ஆனால் இரண்டடி சென்றதும் நின்றாள். ஏனெனில் அச்சமயம் எங்கோ மனிதர் குரல் கேட்டது. ஒத்துக்கேட்டாள். அக்குரல் இனிமையா யிருக்கிறது. வார்த்தைகளைக் கவனித்தபோது யாரோ கடவுளை யுருக்கமாய்ப் பிரார்த்தனை செய்கிறார்களென்று தெரிந்தது. குரல் மிக்க இனிமையாயிருந்தாலும் ஆடவன் குரலென்றும், நல்ல வாலிபன் குர லென்றும் புலப்பட்டது. முதலில் அச்சத்தம் சமீபத்திலிருந்தே வருகிற தென்று மட்டும் தெரிந்தது. ஆனால் எப்பக்கத்திலிருந்து வருகிறதென்றும் கீழிருந்தா மேலிருந்தா என்றும் சற்றாவது புலப்படவில்லை. பின்னும் நன் றாய் ஒத்துக் கேட்டபோது பக்கத்திலிருக்கும் பலகைச் சுவரின் மறுபக்கத்தி லிருந்து வருகிறதென்று தெரிந்தது. நாயும் அந்த விடத்தில் நின்று பல கையைப் பிராண்டிற்று.

கமலாம்பாள் அங்கொரு அறை யிருக்கவேண்டும் என்று யூகித்துக் கொண்டாள். ஆனால் இதுகாறும் அங்கு ஒரு அறையிருப்பதாய் தனக்குத் தெரியாது. இப்போது அந்த அறைக்குச் செல்லும் வழியெங்கிருக்கக் கூடு மென்று சற்றேனும் புலப்படவில்லை. மேல்பக்கமிருந்த ஒரு சிறு சாளரத் தின் வழியாய் உள்ளே வந்துகொண்டிருந்த சந்திரன் ஒளி பலகையின் அப் பாகத்தில் அச்சமயம் தாக்கிக்கொண்டிருந்ததால், அங்குதடவிப்பார்க்க முயன் றாள். பழைய கட்டிடங்களில் கள்ள அறைகளும் அவற்றிற்குக் கள்ள வழி களும் இருப்ப துண்டென்று தான் கேள்விப்பட்டிருப்பதால் அவ்வாறு தட விப் பார்த்தாள். இவள் நின்ற விடத்திற்கு நேராய் மிக்க அருகாமையில் அப்பலகையின் மறுபக்கத்தில் இரண்டடி தூரத்திற்குள்ளேயே அச்சத்தம் உண்டாகிறதென்று தெரிந்தது. அவள் அவ்வாறு கையை யழுத்தித் தட விக்கொண்டேயிருக்கையில் தன்னையறியாமலே அங்கிருக்கும் கதவைத் திற க்கும் மறைவான சூத்திரத்தின்மேல் கைதாக்கி விடவே திடீரென்று அங் கிருந்த ஒரு சிறு கதவு திறந்துகொண்டதும் அந்த அறைக்குள்ளிருந்த தீபத் தினொளி பளிச்சென்று அவள்மேல் பிரகாசித்தது. உடனே அங்கொரு அறை யிருப்பதையும் அதன் மத்தியில் தீபவொளியில் ஒரு அழகான வாலி பன் முழங்கால் படியிட்டு கடவுளை யுருக்கத்தோடு பிரார்த்திப்பதையுங் கண் டாள்.

(இன்னும்வரும்)

## " ஆனந்தபோதினி " பஞ்சாங்கம்

### நள௵ மார்கழி௴ சாலிவாகன 1838, கலியுகாதி 5017,
### பசலி 1325-26, கோல்லம் 1091-92,
### இங்கிலீஷ் 1916-ம்௵ டிசம்பர்—1917 ஜனவரி௴

| டிசம்பர் | மார்கழி௴ | வாரம் | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 15 | 1 | வெ | சஷ்—55-56 | மக-60-0 | மரண-60 | இராசி அளக்க |
| 16 | 2 | ச | சப்-57-21 | மக-0–10 | சித்த 60 | சித்திரமெழுத |
| 17 | 3 | ஞா | அஷ்-60-0 | பூர-5-8 | சி 5 அமி | தனியநாள் |
| 18 | 4 | தி | அஷ்-0-10 | உத்–9–0 | சித்த 60 | ருதுசாந்தி செய்ய |
| 19 | 5 | செ | நவ–1–38 | அஸ்-11-37 | சித்த 60 | உதயம் கிருஷிக்குப்போக |
| 20 | 6 | புத | தச-1–46 | சித்-13-9 | சித்த 60 | கரிநாள் |
| 21 | 7 | வி | ஏகா-0-53<br>துவா-57-54 | சுவா-13-27 | அமி 13 சி | வியாதிக்கு மருந்துண்ண |
| 22 | 8 | வெ | திர-55–21 | விசா-12-28 | சித்த 60 | பொன்னுருக்க |
| 23 | 9 | ச | சது-51-19 | அநு-10-50 | சித்த 60 | கரிநாள் |
| 24 | 10 | ஞா | ● அமா-46-23 | கேட்-8-2 | மர 8 அ | அமாவாசை விரதம் |
| 25 | 11 | தி | பிர–41-49 | மூல-4-43 | சித்த 60 | கரிநாள் |
| 26 | 12 | செ | துதி-35-22 | பூரா-0-58<br>உத்-55-58 | சித்த 60 | பூமுடிக்க |
| 27 | 13 | புத | திரி-29-37 | திரு–52-48 | சித் 52 ம | சமஸ்தாபரணம் தரிக்க |
| 28 | 14 | வி | சது-23-48 | அவி–48–48 | சித் 49மர | விருந்துண்ண |
| 29 | 15 | வெ | பஞ்–18-18 | சத–45–11 | சித்த 60 | சஷ்டி விரதம் |
| 30 | 16 | ச | சஷ் -13 -17 | பூர–42–7 | சித்த 60 | கபிலை யேத்தம் வைக்க |
| 31 | 17 | ஞா | சப்-9–37 | உத்–39-41 | அமி 60 | சீமந்தம் |
| 1917–ஜனவரி௴ | | | | | | |
| 1 | 18 | தி | அஷ்-5-6 | ரேவ-38–14 | சித்த 60 | ருதுசாந்தி செய்ய |
| 2 | 19 | செ | நவ-2-30 | அசு-37·43 | சித்த 60 | வாகனம் வாங்க |
| 3 | 20 | பு | தச-1-1 | பர-38-51 | சித் 39 அ | மூலிகை உபயோகிக்க |
| 4 | 21 | வி | ஏகா–3-12 | *கார்-42-48 | மரண 60 | வைகுண்ட ஏகாதசி |
| 5 | 22 | வெ | து-4-11 | ரோக-45–58 | மர 46 சி | உபனயனம் |
| 6 | 23 | ச | திர-7-33 | மிரு-47–59 | சித்த 60 | 3-க்குள் மழை |
| 7 | 24 | ஞா | சது–10–9 | திரு–53-18 | சித்த 60 | ஆருத்திராதரிசனம் |
| 8 | 25 | தி | ○ பௌள13-34 | புன–59–15 | அமி 60 | வெங்காயம் நட |
| 9 | 26 | செ | பிர-19–45 | பூச-60-0 | சித்த 60 | உதயம் கிருஷிக்கு ஏர் உழ |
| 10 | 27 | புத் | துதி-25-5 | பூச–5–51 | சித்த 60 | வாழை மா நட |
| 11 | 28 | வி | திரி–30-18 | ஆயி-14-49 | சித் 15 அ | ஜெபம் பூர்த்திசெய்ய |
| 12 | 29 | வெ | சது-34–47 | மக-18-7 | மர 19 சி | தானியம் கட்டி வைக்க |

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS